தென்மொழி

செந்தமிழர் இறுதிநிலை

செந்தமிழை எண்ணிச் செயற்படுக!
    செந்தமிழர்
வந்தவர லாறெண்ணி வந்திணைக!
    வந்தவர்கள்
சொந்தநலம் தாம்துறக்க! சோர்வின்றிச்
    சூழ்ந்தியங்கி
நொந்தநிலை நீக்கிடுக, நோன்று!

நாட்டுநிலை சிந்திக்க! நந்தமிழ்க்கு
    வந்துற்ற
கேட்டுநிலை போக்கக் கிளர்ந்தெழுக!
    கேண்மையினால்
ஏட்டுநிலை பேச்சுநிலை எல்லாம்
    துலக்கிடுக!
வேட்டுநிலை வேண்டெனினும் வேட்டு!

ஈதுகாண் செந்தமிழர்க் கேய்ந்த
    இறுதி நிலை!
தீதுகாண் பின்னைத் தேருமேல்!
    தேறுவமேல்
சூதுகாண் நீங்கும்! சொந்தநில
    வாழ்வெஞ்சும்!
ஏதுகாண் மற்றிங் கினம்!

சுவடி : 18
ஓலை : 8

ஆசிரியர்
பெருஞ்சித்திரனார்

விலை
உருபா 1-25

www.thamizham.net - Free E book No 7519

நமக்கு வந்த மடல்கள்.

0: 899: பெருந்தகை ஐயா, எங்கள் இளமைத்துடிப்புகளோடு உங்கள் உள்ளத்துடிப்புகள் இணைந்து தமிழனை மேம்படுத்தும் வகையான் எழுச்சி மிகுஇயக்கம் உருவாக்கிய தங்களை வணங்குகின்றோம். ''தமிழுக்காக, தமிழனுக்காக எங்கள் தோள்களை கொடுக்கஅணியம்! எங்களை வழி நடத்திச் செல்ல வாரீர்'' என இருகைகள் கூப்பி வரவேற்கிறோம். உங்கள் அன்புத்தமிழ் மழலைகள்.

தமிழின்ப எழிலன், அருள்வாணன் முகில்-மாதஇதழ். நாட்டறம்பள்ளி.

0 900: அன்புள்ள தென்மொழியாருக்கு, வணக்கம் தென்மொழி 1982 பெப்-மார்ச் இதழில் வள்ளியூர் அன்பர் திருப்பாற்கடல் கடிதம் பார்த்தேன். அக்கடிதத்தில் பர். பொற்கோவை தமிழினப் பகைவர் எனச் சுட்டுகிறார். அவர் எந்த வகையில் சுட்டுகிறார் என விளங்கவில்லை. தாங்கள் அக்கடிதத்தை எந்த வகையில் வெளியிட்டுள்ளீர்கள் என்பதும் விளங்க வில்லை. இளைய குழகாயத்தில் தனக்கென வாழாமால் பிறர்க்கென வாழும் ஒரு மொழியியல், மக்களியல் அறிஞரைத் தமிழினப் பகைவர் எனக் குறிப்பிட்டது ஏன் என்று விளக்க வேண்டும். தென்மொழி அன்பர்கள் அக்கடிதத்தைப் பார்த்து, பர். பொற்கோவின்பால் தவறான கண்ணோட்டம் ஏற்பட வழி வகுக்கிறது. தென்மொழியிலேயே வள்ளியூரன்பர் திருப்பாற்கடல் வழியோ, தென்மொழி வழியோ விளக்கம் கிடைக்குமா? தென்மொழித் தோழன் — **சி. பி. சர்வாதிகாரி.** இரும்புலிக்குறிச்சி.

0: 901: பேரன்புசால் தமிழறிஞர் ஐயாவுக்கு, தங்கள் அன்புத் தென்மொழி அன்பன் வரையும் மடல். ஐயாவை மேட்டூர் அணையில் 'பார்ப்பன வல்லாண்மை' ஒழிப்பு மாநாட்டில் கலந்து கொள்ள வந்த பொழுது என் குடும்பத்துடன் சந்தித்து. என் துணைவியின் பிறந்த நாளுக்கு வாழ்த்துப் பெற்றமை குறித்து பெரும் மகிழ்ச்சி அடைந்தேன். மேலும் நான் அன்றிரவு 10-00 மணியளவில் தொடங்கிய தங்கள் எழுச்சிமிகு தனித்தமிழ் உரையினை என் வாழ் நாளில் முதன் முறையாகக் கேட்கும் பேறு பெற்றேன் 1மணி நேரம் வீறுமிக்க தூய தமிழ்ச் சொற்கள் தங்கு தடையின்றிக் கருத்தாழத்துடன் வந்து கொட்டிக்கொண்டிருந்தன. தனித்தமிழில் பேச முடியுமா என ஐயமுறும் அனைவருக்கும் அஃது ஒரு சூளுரை.

என் இந்த மாந்தப் பிறவியில் தங்களைப் போன்ற ஒரு தன்னலமற்ற தண்டமிழ்ச் சான்றோரை துணையாகவும், வழிகாட்டியாகவும், பெற்றமை மிகவும் எண்ணி மகிழத்தக்க ஒன்று. நானும், தாமரைச் செல்வியும் (பத்மினிதேவி) நாளும் ஐயாவையும் குடும்பத்தையும் பற்றிப் பேசாதிருக்க முடிவதில்லை. தென்மொழியில் தாங்கள் வெளியிட்டுள்ள அறவழியில்தான் எங்கள் வாழ்க்கையை நடத்த முயன்று வருகிறோம். தாங்கள் இத்தமிழர்கள் தன்மானம் பெற்று எழுச்சி பெற ஆற்றும் தொண்டிற்கு இத்தமிழ் உலகம் என்றென்றும் நன்றிக் கடன் பெற்றுள்ளது. இறைவன் அருளால் எல்லா நலனும் பெற்று நெடிது வாழ்ந்து தொண்டாற்ற வேண்டுகிறேன். அன்பன்,

மருத்துவர் அ. விசுவநாதன். ம.இ., அ.இ. தாமரைச்செல்வி அறி. மு.

(தொ.

www.thamizham.net - Free E book No 7519



"கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை;" எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே.

[நிறுவனம் தி. பி. 1990 (1959)]



தென்மொழி

மொழி—இனம்—நாடு.

நம் மூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி!

இந்தியா ஒன்றாக இருக்கும் வரை இந்து மதம் இருக்கும். இந்து மதம் இருக்கும் வரை தமிழர்களும் இந்துவாகவே இருக்க வேண்டும். தமிழர்கள் இந்துவாக இருக்கும்வரை மதப் பூசல்களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகவே முடியாது. மதப் பூசல்களும் குலக்கொடுமைகளும் அவர்களை விட்டு விலகாதவரை, ஆரியப் பார்ப்பனரின் வஞ்சகத்திலிருந்தும் மேலாளுமையினின்றும் தமிழன் மீளவே முடியாது. அத்தகைய பார்ப்பனியப் பிடிப்புகளிலிருந்து தமிழன் மீளாதவரை, தமிழ் மொழி தூய்மையுறாது; தமிழினம் தலைதூக்காது; தமிழ்நாடு தன் நிறைவு அடைய முடியாது. எனவே, இந்து மதத்தினின்றும், மதப்பூசல்களினின்றும், ஆரியப் பார்ப்பனியத்தினின்றும் விடுபட வேண்டுமானால், நாம் இந்திய அரசியல் பிடிப்பினின்றும் விடுபட்டேயாகல் வேண்டும். ஆகவே, தமிழக விடுதலை தான் நம் முழுமூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி என்று தமிழர் ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும்.

பொறுப்பாசிரியர்: **பெருஞ்சித்திரனார்**

புரப்பாளர்கள்: தென்மொழி முல்லைவாணன், (சிங்கை).
தென்மொழிமறை. நித்தலின் பனார், தென்மொழி ந. முத்துக்குமரனார்
தென்மொழி ப. துரையரசன், தென்மொழி. நா. இளமாறன்.
அமைச்சர் : அழ. இளமுருகன், அறி. இ.

(பெயரின்றி வரும் அனைத்துப் படைப்புகளும் பொறுப்பாசிரியரால் எழுதப்பெறுவன.)

சுவடி: 18] தி. பி. உ0கஙு மீனம் (மார்ச்சு-ஏப்பிரல்'82)[ஓலை: 8

பெரியார் விதைத்தவை நச்சு விதைகள் என்றால், பார்ப்பனர் விதைத்தவை என்ன விதைகள்?

முள்மயிர் மூடிய முக்காட்டுத் தலையும்,
கொள்கோல் கமண்டலம் கொண்ட கைகளும்
நீறு மண்டிய நெற்றியும், பார்ப்பனத்
தூறு மண்டிய உள்ளமும் கொண்டு—
கரவுச் சிரிப்பொடு காவி உடையில்
துறவியாய் உலாவரும் பார்ப்பனத் தொழும்பு—

www.thamizham.net - Free E book No 7519

காஞ்சி காம கோடி மடத்தின்
மூஞ்சி ஒன்று—சின்னப் பெரியவாள்—
என்னும் பெயருடன், இந்தியா வெங்கும்
மன்னிய சிற்றூர் பேரூர் எல்லாம்
கால்நடைச் செலவாய்ப்—'பாதயாத் திரை'யாய்—
நீள்நடை யிட்டே 'ஆரிய' 'நியம'த்தை
நாள் தொறும் பரப்பிடும் நாடகம் அறிவோம்!

அந்த 'மூஞ்சி' தான், அண்மையில்—துணிந்து—
வெந்ததும் வேகா ததுமாய்—ஓர்கருத்தைத்—
திருவாய மலர்ந்து—திக்கி யுள்ளது!
பெரியார் அண்ணா ஆகியோர் நம்மிடம்
மூச்சுக் காற்றாய் முழங்கிச் சென்ற
பேச்சுகள் எழுத்துகள் நச்சு விதைகளாம்!
நாட்டில் அந்த நச்சுகள் பரவிக்
கேட்டைத் தந்தவாம்! கெடுத்துவிட் டனவாம்!
சின்னப் பெரியவாள் சிந்திய முத்து, இது!
பொன்னூல் பொறித்த 'வேதப்' பொழிவிது!
கேட்டுக் கொண்டுதான் உள்ளோம்! கேட்டதும்
மாட்டிக் கொண்டு மடிந்திட வில்லை!

அல்லது, அத்தகு அன்புரை கூறிய
நல்ல 'பிறவி'யின் நாக்கை அறுத்துத்
தங்கத் தகட்டால் உறைசெய்து மாட்டிப்
பொங்கு பூசைகள் புகைத்திட வில்லை.

ஏன் தான் பிறந்தோம்? எதற்கு வாழ்கிறோம்?
வீணான பிறவிநாம்! விழல்களாய் இருக்கிறோம்!

கருகிப்போய்க் கிடந்தஇந் நாட்டிடை வந்தே
உருகி உருகி உயிரைத் தேய்த்தே
ஒளியைப் பரப்பிய ஊழித் தலைவராம்
அளிசேர் எங்கள் அருமைப் பெரியார்
பேசிய பேச்சுகள் நச்சுகள் என்றால்—
ஊசிய கருத்தை உரைத்த புராணங்கள்,
வேத அழுக்குகள், பொய்ம்மை விளக்கங்கள்—
ஊளை உளறுத்தைகள் நச்சிலா உரைகளா?

ஆரிய மாய்யயில் அழுந்திக் கிடந்த
வீரியம் குறைந்த திரவிடர் விலாவில்
செந்தமிழ் மறத்தைப் பாய்ச்சிட இராப்பகல்
அந்தமிழ் பேசிய—எழுதிய—அண்ணா

www.thamizham.net - Free E book No 7519

பரப்பிய கருத்துகள் நச்சுகள் என்றால்—
சுரப்புடைப் பார்ப்பனர் சொன்னவை எல்லாம்
நச்சிலா உரைகளா? நன்மைதந் தவையா?
கச்சி 'உருவம்' கதைத்தது சரியா?
என்னஇக் கொடுமை? என்னஇக் கூற்று?
சின்னப் பெரியவாள் செருக்குதான் என்ன?

சேற்றில் புழுக்களாய்—சிற்றுயிர் இனங்களாய்—
மாற்றிட இயலா மந்தை ஆடுகளாய்—
வழிவழிப் பார்ப்பனர் வந்து புகுத்திய
இழிவினை உணரா இழிபிற விகளாய்—
ஆரியக் கொடுநச் சரவம் கொத்திச்
சீரிய மொழியையும், சிறந்தநல் லறிவையும்,
ஆயிரம் ஆயிரம் அறிவுநூல் தொகையையும்,
ஏயுநல் லிலக்கிய இலக்கண இயல்பையும்,
நாகரி கத்தையும் நல்லபண் பாட்டையும்,
ஆகிய அரசையும் ஆட்சி நலத்தையும்,

ஒருங்கே அழித்துக் கொண்டஓர் இனத்தைப்
பெருங்கொள் கையினால் பிழைக்க வைத்த—

தன்மான ஊற்றினைத் தகைமைத் தலைவனை,
மண்மானங் காத்த மாபெரும் மீட்பனை,
அரியாருள் எல்லாம் அருஞ்செயல் ஆற்றிய
பெரியார் என்னும் பெரும்பே ரரசனை—

இழிப்புரை சொல்வதா? சொல்லியிங் கிருப்பதா?
பழிப்புரை வந்துநம் செவிகளிற் பாய்வதா?

நச்சு விதைகளா, நயந்து அவர் சொன்னவை?
பச்சிலை மருந்தன்றோ, எமக்கவர் பகர்ந்தவை?

பார்ப்பனப் பதடிகள் எம்மைப் படுத்திய
ஆர்ப்பொலி அடங்கியது அவரினால் அன்றோ?

ஆரியக் குறும்பர்கள் ஆக்கிய கொடுமையின்
வேரினைத் தீய்த்தது அவர்வினை யன்றோ?

மக்களுள் மக்களை வேறு பிரித்துத்
தக்க அவர் அறிவுக் கண்களை அடைத்து,
மடமைச் சகதியில் — மடிமை இருளினுள்-
கடமை தவிர்த்த கரவுச் சேற்றினுள் —
புதைத்த பார்ப்பனர் புன்மையைத் தடுத்துச்
சிதைத்தவர் அல்லரோ ஈரோட்டுச் செம்மல்?

www.thamizham.net - Free E book No 7519

அவர்தம் முயற்சியை அடியொற்றி நடந்து
தவறிலாத் தமிழர் ஆளுமை தழைத்திட
உழைத்தவர் அல்லரோ அண்ணா உயர்மகன்?
இழைத்தஇவ் விருவரும் உரைத்தவை நஞ்சா?

இப்படி இங்கோர் 'எருமை' சொன்னால்
எப்படித் தமிழா இதனைப் பொறுப்பது?

'வீரப் பன்'கள் வேண்டு மானால்
'மாறப்பன்' களாகி மண்ணைக் கவ்வலாம்!

யாரப்பன் என்று தெரியாதா பிறர்க்கு?
சேரப்பன் ஒருவன், 'சினை'யப்பன் ஒருவனா?

பாரப்பா தமிழா பார்ப்பனன் மொழிவதை?
வீரப்பர் போனால் விறலப்பர் இல்லையா?

வேதஆ கமங்கள் — விரிந்தபு ராணங்கள் —
சூதுஇதி காசங்கள் — சூழ்ச்சிசெய் மனுக்கள் —
இன்றைக்குப் பார்ப்பனன் எழுதும் இழிவுகள் —
என்றிவை யாவுமே இனியவை ஆகுமா?

பெரியார் அண்ணா வாய்களில் பிறந்தவை
உரிய மக்களுக் குதவிட வில்லையா?

தமிழர்க்கு அறிவைத் தந்திட வில்லையா?
தமிழர்க்குத் தன்மானம் ஊட்டிட வில்லையா?

தமிழின உணர்வைத் தட்டி யெழுப்பி
அமிழாத இனநலம் ஆக்கிட வில்லையா?

ஆரியர் செய்த அழிம்புகள் யாவையும்
கூரிய உரைகளால் கொன்றிட வில்லையா?

பார்ப்பனச் சூழ்ச்சியைப் பகுத்துக் காட்டி
ஆர்ப்புற் றெழும் உணர் வளித்திட வில்லையா?

ஆயிரம் ஆயிரம் ஆண்டுக ளாக
நாயினுங் கேடாய் நந்தமிழ்ப் பேரினம்

நலிக்கப் பட்டும் நசுக்கப் பட்டும்
மெலிக்கப் பட்டும் மேலே றாமல்
கிடந்த கீழ்மையைக் களைந்து காட்டி
அடர்ந்தவர் எழுந்திட அளிதர வில்லையா?

பெரியார் உரைகளும் பெறற்கருந் தொண்டும்
உரிய பொழுதில் உதவிட வில்லையெனில்

www.thamizham.net - Free E book No 7519

தமிழினம் விழித்திடும் தகைவுநேர்ந் திருக்குமா?
தமிழ்மொழி பிழைத்துத் தலைமைபெற் றிருக்குமா?
ஆரியச் சேற்றினுள் அழுந்தித் தமிழன்
வீரியம் குன்றி மூச்சு விளர்ந்து
புதைக்கப் பட்டுப் போயிருக் கானா?
சிதைக்கப் பட்டிருக் காதா அவன் இனம்?

இவையெலாம் நேர்ந்திட வில்லையே என்ற
நவையுறு ஏக்க நலிவினால் அன்றோ
காஞ்சிச் சின்னவாள் கதைத்துத் திரிகிறார்?
பூஞ்சையாய்ப் போன புல்லுரை புகல்கிறார்?

பெரியார் ஊன்றிய நச்சு விதைகளால்
அரிய விளைவே அற்றுப் போகி
நாடே கெட்டு விட்டதாய் நவில்கிறார்!
நாடென்ன இவரது பாட்டனின் ஈட்டமா?
நாடு கெட்டால் நமக்கிது தகாதென
ஓடிட வேண்டுவ தன்றோ உயர்ந்தது!

நாடு கெட்டதா? பார்ப்பனர் நாட்டிய
கேடு கெட்டதா? எஃது இங்குக் கெட்டது?

ஆரியக் கொட்டங்கள் ஆட்டங் கண்டு, அதன்
பூரியச் செயல்கள் புதைக்கப் பட்டன!

பார்ப்பனப் பூசல்கள் இனிநட வாதெனும்
போர்ப்பண் இங்கே எழுச்சி கொண்டது!
தமிழினம் மீண்டும் பெரியார் தொண்டினால்
இமைவிழி திறந்து எழுந்து கொண்டது!

அந்த எரிச்சலால் ஆரியத் தலைவர்
நொந்து சாகிறார்; நொட்டணை சொல்கிறார்.

பெரியார் விதைத்தது நச்சாம்! காஞ்சிப்
பெரியவர் விதைப்பது மருந்து விதைகளாம்!

ஏமாற்றிக் கொண்டே இருந்திட லாமெனத்
தாமாற்றும் பொய்யையும் புளுகையும் மேலும்
தொடர்ந்து வருகிறார் சின்னப் பெரியவாள்!
அடர்ந்து வருமோர் ஆக்கம் அறிகிலார்!

அவருக் கிதன்வழி அறைந்திடு கின்றோம்!
தவறு நடந்தது தனிவர லாறு!
செய்த தவற்றையே மேலும் செய்திட
பொய்செய் பார்ப்பனர் எண்ணுதல் புரையே!

www.thamizham.net - Free E book No 7519

எங்கே நீ ஓடுகிறாய்?

—தமிழ்மகோன்

எங்கே நீ ஓடுகிறாய்? என் தமிழா! நில்லேன்!
இவனொருவன் சொல்லுவதைக் கேட்டுத்தான் செல்லேன்!
இங்கே உன் திருநாட்டில் என்னவளம் இல்லை?
எதற்காக உன்போன்றோர் இரக்கின்றார்? சொல்லேன்!
எங்கே உன் பண்பாடு நாகரிகம் எல்லாம்?
எவர் பின்னால் போகின்றாய்? எண்ணித்தான் பாரேன்!
செங்கரும்பு மழலைச்சொல் சிறுவர்க்குன் மண்ணில்
செந்தமிழா? ஆங்கிலமா? எதுவேண்டும் சொல்லேன்!

பல்லுயிரும் கடவுள்வாழ் கோயிலெனக் கொண்ட
பழந்தமிழர் கொள்கையினைக் கைவிட்டு விட்டு
கல்லுருவைக் களிமண்ணைக் கண்டதனைப் போற்றி
கைகூப்பித் தொழுவதில்உன் கருத்தென்ன? கூறேன்!
எல்லார்க்கும் பிறப்பொக்கும்; பிறப்பதனால் எவரும்
எவ்வுயர்வும் பெறுவதிலை என்றதெளி வின்றி
"நில் அங்கே நீ தாழ்ந்தோன், கருவறையின் உள்ளே
நுழையாதே!" என்றால் நீ நிற்பதுமேன்? சொல்லேன்!

நடமாடும் கோயிலென நம் மக்கள் பல்லோர்
நல்குரவால் உணவின்றி நிலையாகத் தங்க
இடமின்றி, உடல் மறைய ஆடைகளும் இன்றி
இரப்போராய் ஏழையராய் இருந்துவரும் போது
படமாடும் கோயிலுக்குப் பணம்தருதல் ஏனோ?
பல்லக்கு, தங்கத்தேர், பொற்கவசம் மற்றும்
குடமுழுக்குப் போன்றவையில் கணக்கில்லாக் காசைக்
கொட்டியழல் சரிதானா? கேட்கின்றேன்,சொல்லேன்!

(முன் பக்கத் தொடர்ச்சி)

இனநலத் தீங்கை இற்றைத் தமிழர்
உணர்ந்து கொண்டனர்! உறக்கம் கலைந்தனர்!

இன்னும் அவரை இன்னலில் ஆழ்த்திட
எண்ணும் நினைவை பார்ப்பனர் எண்ணினால்
அவர்க்கது சாக்காட்டுத் தீமையை அளித்திடும்!
எவர்க்கும் எங்கும் தீங்கினை எண்ணியே
பழக்கப் பட்ட பார்ப்பன இனத்தினர்
வழக்கத்தை மாற்றி வாழ்வகை காணுக!
நெருப்புத் தமிழர் நிலையறிந்து
இருப்பதற் கேனும் இனிநலம் கருதுக!

—பெருஞ்சித்திரனார்

www.thamizham.net - Free E book No 7519

ஆங்கிலேயர் இந்நாட்டை ஆண்டிருந்த நாளில்
அஞ்சலகப் பெயர்ப்பலகை அத்தனையும் முதலில்
ஆங்கிலத்தைக் கொண்டிருக்க அதன்கீழ்தான் உன்றன்
அன்னைமொழிக்(கு) இடமிருக்கும். அவர்போன பின்போ
ஆங்கிலத்தைக் கீழிறக்கி அவ்விடத்தில் இந்தி
அழகாக வீற்றிருக்க அதனடியில் தமிழ்தான்
ஏங்குவது போலிருக்கும் ஏக்கநிலை பாரேன்!
இஃது உன்றன் பார்வையிலே படவிலையா? சொல்லேன்!

உன்னாட்டில் உன்மொழியில் மலர்கின்ற இதழ்கள்
ஒருசிலவே உன்நன்மை நாடுவன; பிறவோ
ஒன்றுக்கும் உதவாத செய்திகளைப் போட்டே
ஒழுக்கமிலா இழிகாமக் கதைகளையே எழுதி
உன் நெஞ்சைப் பாழாக்கி வரும்கொடுமை எதனால்?
ஓயாது வெளியாகும் பெரும்பான்மை இதழ்கள்
உன்னழிவை எண்ணுகின்ற உட்பகையின் கையில்
உள்ளதனால் தான்அன்றி வேறென்ன? சொல்லேன்!

அரைகுறையாய் உடை உடுத்தி ஆண்பெண்கூத் தாடும்
அருவருப்புக் காட்சிகளே மிகையாகக் கொண்ட
திரைப்படத்தைப் பார்ப்பதுவும், திரைநடிகர் தம்மை
தலைமேல்வைத் தாடுவதும் அறியாமை அன்றோ?
திரைப்படத்தால் நன்மையின்றித் தீமைதான் நாளும்
தழைப்பதனைக் காண்கிலையோ? தமிழா நீ அதனை
விரைவினிலே வேரறுத்து உன்மக்கள் உய்யும்
வகையினிலே தொண்டாற்ற வேண்டாமோ! சொல்லேன்

பிறப்பாலே சாதிகளாம்! பிரிவினைகள் ஒருபால்
பெருகிஉனை சீர்குலைத்தல் போதாவென்(று) அந்தோ,
பிறர்தொண்டே கொள்கையெனக் கட்சிகளும் ஒருபால்
பல்கிஉனைப் பிரிப்பதனை எண்ணித்தான் பாரேன்!
மறவாமல் தலைவரெலாம் தந்நலமே பேணல்
மிகநன்றாய்த் தெரிவதையுன் மக்கட்குச் சொல்லிச்
சிறப்பாக உன்னினத்தை ஒன்றாக்கி உயர்த்தி
செம்மையுறச் செய்திடலுன் கடன்அன்றோ? சொல்லேன்

உன்மொழியை உன்னாட்டை உன்னினத்தைப் பற்றி
ஒருநாளும் ஒருகணமும் நீநினையா வண்ணம்
உன்அறிவை மயக்கியுனைத் திசைதிருப்பி விட்டு
வருவனவாம் வகையற்ற அரசியல்சார் மேடை
பன்மாயத் தீமைசெய் திரையரங்கம் மற்றும்
பகட்டான விழாக்களிவை பார்த்தது நீ போதும்!
உன் மொழியும் உன்னினமும் உயர்வடைய வேண்டி
ஒரு சிறிது தொண்டாற்ற உவப்புடனே வாயேன்! o

www.thamizham.net - Free E book No 7519

செய்திகள்

1. நெமலி — இலக்கிய மன்ற விழா:

வ. ஆ. மாவட்டம், நெமலியில், கடந்த 3—3—82 காலை 9-30 மணியளவில், ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளியில், நெமலி ஒன்றிய (நெமலி. சேந்தமங்கலம். நாகவேடு, பனப்பாக்கம் ஆகிய) ஆசிரிய சங்கங்களின் கூட்டுக் கூட்டம் நடைபெற்றது நிகழ்ச்சிக்கு,நெமலி பள்ளித்துணை ஆய்வாளர் ஆர்.எசு, பத்மநாபன் க. இ., ஆ. ப. தலைமை தாங்கினார். உதவிக் கல்வி அலுவலர் க. சுப்பிரமணியன், க. இ., அறி. இ. முன்னிலை யேற்றார். இளம் பள்ளித் துணை ஆய்வாளர் தி. இரா. கந்தசாமி வரவேற்புரையாற்றினார். **பாவலரேறு பெருஞ்சித்திரனார்** 'திருக்குறள் மெய்' என்னும் தலைப்பில் 2½ மணிநேரம் சிறப்புரை யாற்றினார்கள். ஆசிரியர்கள் நடுவில் இவ்வுரை மிகவும் பயனுடையதாகவும், அறிவூட்டுவதாகவும் இருந்தது.

2. நெமலி, அரசு மேனிலைப் பள்ளி:

வ. ஆ. மா. வ. நெமலி, அரசு மேனிலைப்பள்ளியில், 3—3—82 பிற்பகல் 4 மணியளவில் இலக்கிய மன்ற விழா நடைபெற்றது. தலைமையாசிரியர் தா. சோ. சந்தனசாமி க. மு., ஆ. ப. தலைமை யேற்றார். பாவலர் குமர. தன்னொளியன் உரைக்குப் பின் **பாவலரேறு பெருஞ்சித்திரனார்** 'இக்கால இலக்கியம்' பற்றி ஒரு மணிநேரம், மாணவர்கள் உளங்கொள்ளுமாறு அரியதொரு சிறப்புரையாற்றி மகிழ்வித்தார்கள். தொடக்கத்தில் மு. கதிரவன் க. மு. வரவேற்புரையும், இறுதியில் எசு, கந்தன்(உதவித்தலைமையாசிரியர்) நன்றியுரையும் ஆற்றினார்கள்.

3. திராவிடர் கழக மாநாடு - மேட்டூர்:

கடந்த 7—3—82 ஞாயிறு, மேட்டூர் அணை, சதுரங்காடி திடலில், திராவிடர் கழகத்தின் சார்பில் பார்ப்பன வல்லாண்மை ஒழிப்பு மாநாடு மிகச்சிறப்பாக நடைபெற்றது. காலை 9மணியளவில் திராவிடர் இளைஞர் இன எழுச்சி மாநாடும். பார்ப்பன வல்லாண்மை என்னும் தலைப்பில் கருத்தரங்கமும், பிற்பகல் 3 மணியளவில் பேரா. **கு வெ. கி. ஆசான்** க. மு., ச. இ. அவர்கள் நடுவாண்மையில், 'பாரதி வளர்த்தது பார்ப்பனியமே — மூட நம்பிக்கையே' என்னும் தலைப்பில் பட்டி மன்றமும் நடைபெற்றன. மாலை 8-30மணியளவில் **பாவலரேறு பெருஞ்சித்திரனார்** பார்ப்பன வல்லாண்மை ஒழிப்பு மாநாட்டிற்குத் தலைமையேற்று மிக்க அரியதோர் ஆய்வுரை நிகழ்த்தினார். அதைத்தொடர்ந்து அறிஞர் பலர் கருத்துரை வழங்கினர்.

www.thamizham.net - Free E book No 7519

இறுதியில் தி. க. பொதுச் செயலாளர் **கி. வீரமணி** க. மு., ச. இ. அவர்கள் சிறப்புரையாற்றினார். மாநாடு இரவு 1 மணியளவில் நிறைவுற்றது.

4 சென்னை, மைலாப்பூரில் குச்சுப்புடி நடன நிகழ்ச்சி:

சென்னை, மைலாப்பூர், 'இரசிக இரஞ்சினி சபை' அரங்கத்தில், கடந்த 10-3-82 மாலை 7 மணியளவில், காகிநாடா நடராச நர்த்தன கலைச்சாலையைச் சார்ந்த செல்வி. **டி. மகாராணி** என்னும் **கிரி நிதியின்** குச்சுப்புடி நாட்டிய நிகழ்ச்சி மிகச் சிறப்புற நடைபெற்றது. நிகழ்ச்சிக்குப் பாவலரேறு **பெருஞ்சித்திரனார்** தலைமை தாங்கினார். தலைமை விருந்தினராக திருவாட்டி **சித்திரா விசுவநாதன்** பங்கேற்றார். திரைப்பட நகைச்சுவை நடிகர் திரு. **நாகேசு** அவர்கள் முன்னிலையேற்றார். **பாவலரேறு** அவர்கள் தம் தலைமையுரையில் பழந்தமிழ்க் கலைமரபுகள் சீரழிந்து வருவதை எடுத்துக்காட்டி, செல்வி மகாராணியின் நாட்டியச் சிறப்பை மிகவும் பாராட்டி, அவர்க்கு நாட்டியப் பேரரசி என்னும் பெயர்ப் பொருத்தத்தையும் விளக்கி உரையாற்றினார். அவையோர் அவருரையைக் கேட்டுப் பெரிதும் மகிழ்ந்து போற்றினார்கள்.

5. தஞ்சை, திருக்குறள் பேரவை நிகழ்ச்சி.

சென்ற 15-3-82-இல், மாலை 7 மணியளவில் தஞ்சை பிரமஞான சங்கத்தின் ஆதரவில், பெசண்ட் இல்லத்தில், தஞ்சை, திருக்குறள் பேரவை விழா நடைபெற்றது. நிகழ்ச்சி பேரா. **அரங்க வடிவேலன்** கீ. க. மு., மெய். மு. அவர்கள் தலைமையிலும், திரு **அ. கிருட்டிண மூர்த்தி** க. மு., ப. இ. அவர்களின் முன்னிலையிலும் நடைபெற்றது. நிகழ்ச்சியில் **பாவலரேறு பெருஞ்சித்திரனார்** அவர்கள் 'திருக்குறளும் குமுகாயமும்' என்னுந் தலைப்பில் அரியதொரு சிறப்புரையாற்றினார்கள். தொடக்கத்தில் பேரவைச்செயலர் புலவர் திரு. **பழனி மாணிக்கனார்** அவர்கள் பாவலரேறு அவர்களைப் பாவுரையால் வரவேற்றுப் பாராட்டிப் பெருமை செய்தார். பாவலரேறுவின் உரை, அவையினரிடத்தில் ஒரு புத்துணர்வை ஊட்டியதென்று கூறப் பெற்றது.

6. பூண்டி-திருமலர்க்கல்லூரி —பாவேந்தர் விழா:

கடந்த 16—3—82 இல், மாலை 3மணியளவில் தஞ்சை மா. வ. பூண்டி, அ. வீ வா-நினைவு திருமலர்க்(புட்பம்)கல்லூரியில், பாவேந்தர் விழா கொண்டாடப் பெற்றது. நிகழ்ச்சிக்குப் பேரா. **கி. கோதண்டபாணி** க. மு., கீ. க. மு. தலைமை யேற்றார். மாணவர் தலைவர் நம் சீனிவாசன் வரவேற்புரையாற்றினார். தலைவரவர்களின் இனிய முன்னுரைக்குப்பின் **பாவலரேறு பெருஞ்சித்திரனார்** அவர்கள் பாவேந்தர் அவர்களைப் பற்றிய நினைவுகளுடன், அவரின் இலக்கியங்கள் பற்றியும் சிறப்புரையாற்றினார். மாணவச் செயலர் செள. தேவராசனின் நன்றியுரைக்குப்பின் நிகழ்ச்சி நிறைவுற்றது.

www.thamizham.net - Free E book No 7519

7. சென்னையில் இசைக்கலை விழா:

இராமலிங்கர் பணிமன்றத்தின் நான்காவது ஆண்டு இசைக்கலை விழா, அரசவையவர் அண்ணாமலை நினைவு அறக்கட்டளையின் இணைவுடன், கடந்த மார்ச்சு 14 முதல் 21-ஆம் நாள்வரை, சென்னை, அண்ணாசாலையில் உள்ள இராணி சீதை மன்றத்தில் தொடர்ந்து நடைபெற்றது. ஒவ்வொருநாளும் பல்வேறு பேரறிஞர்களின் கருத்தரங்கமும் இசையரங்கமும் மிகச்சிறப்பாக நடைபெற்றன. 19-3-82-ஆம் நாள் காலை 10 மணியளவில் நடந்த கருத்தரங்கத்தில் **பாவலரேறு பெருஞ்சித்திரனார்** 'பழந்தமிழ்இசை' என்னுந் தலைப்பில் 2 மணிநேரம் அரிய தோர் ஆராய்ச்சிச் சிறப்புரை நிகழ்த்தினார்கள். இசைப் பேரறிஞர்கள் பலரும் வந்திருந்த இந் நிகழ்ச்சிக்கு, திரு. **பகீரதன்** அவர்கள் வரவேற்புரையாற்றினார். அவர்களின் வரவேற்புரையிலும், முடிவுரையிலும் பாவலரேறு அவர்களின் தூய தமிழ் வளர்க்கும் கொள்கையினையும், வினைப்பாடுகளையும், நேர்மையையும், விடாமுயற்சியையும் பலவாறு பாராட்டிப் பேசியதுடன், அவர்களின் அரிய உரைத் திறத்தையும் கருத்துகளையும் மிகுவாகப் புகழ்ந்து கூறினார்.

திரு. பகீரதன் அவர்களின் உரைக்கிடையில், நிகழ்ச்சிக்கு மன்றத் தலைவர் திரு. **நா. மகாலிங்கம்** அவர்கள் வெளிமாநிலம் சென்றுள்ளமையால், மிக விரும்பியும் வரவியலாது போனமை பற்றி அவர் கவலைப் பட்டுக் கூறியதையும், அதனால் விழாவில் பாவலரேறு அவர்களாற்றிய சொற்பொழிவைத் தாம் வந்து கேட்கும் வகையில் நாடாப்பதிவு செய்து வைக்கும்படி தலைவர் தெரிவித்ததாயும் குறிப்பிட்டு, இசைவிழாவில் பங்கு பற்றிய பல்வேறு அறிஞர்களின் கருத்தரங்க உரைகளில், பாவலரேறு அவர்களின் உரை ஒன்று மட்டுமே நாடாப்பதிவு செய்யப் பெற்றதாகவும் கூறி, அவ்வுரையின் அருமை பெருமைகளையும் எடுத்துரைத்தார். உரையை இறுதிவரை இருந்து கேட்ட கீதைப் பேருரையாளர் திரு. நா. கிரிதாரி பிரசாது அவர்கள் உரைமுடிவில் பாவலரேறு அவர்களின் இருகைகளையும் பிடித்து மனம் விட்டுப் பாராட்டியது குறிப்பிடத்தக்கது.

8. சைதை தி. க. மாநாடுகள்:

கடந்த மார்ச்சு 20, 21-ஆகிய நாள்களில், சென்னை, சைதாப்பேட்டை, கோடம்பாக்கம் சாலையில், காலையும் மாலையும் திராவிடர் கழகச் சார்பாகப் பெண்கள் விடுதலை மாநாடு, மண்டல் ஆய்வுக்குழு பரிந்துரைகளைச் செயற்படுத்தக் கோரும் மாநாடு, ஆர். எசு. எசு. எதிர்ப்பு மாநாடு, பார்ப்பன வல்லாண்மை ஒழிப்பு மாநாடு ஆகிய நான்கு பெரும் மாநாடுகள் நடைபெற்றன. நான்கு மாநாடுகளிலும் பல்லாயிரக்கணக்கான உள்ளூர், வெளியூர் பெருமக்கள் நிறைந்திருந்து இறுதிவரை நிகழ்ச்சிகளில் ஆர்வமுடன் கலந்து கொண்டனர். நான்கு மாநாட்டு நிகழ்ச்சிகளிலும் பல்வேறுபட்ட அறிஞர்களும் பங்கு கொண்டு ஆய்வுரைகளையும் கருத்துரைகளையும் நிகழ்த்தினர்.

www.thamizham.net - Free E book No 7519

தி. க. பொதுச்செயலாளர் திரு. **கி. வீரமணியின்** சிறப்புரை நான்கு மாநாடுகளின் இறுதியிலும் நிகழ்ந்தது. இரண்டாம் நாள் முற்பகல் நடந்த ஆர். எசு. எசு. எதிர்ப்பு மாநாட்டில், தஞ்சை மாவட்ட இந்திரா பேராயக்கட்சியின் துணைத் தலைவர் சீர்காழி பெ.எத்திராசு தலைமை யேற்றார். பேரா. கு. வெ. கி. ஆசான் க. மு.,ச. இ. மாநாட்டைத் திறந்துவைத்தார். பேரா. நெடுஞ்செழியன், பேரா. பொன்முடி பேரா. வீரபாண்டியன், கே. எசு. சங்கரவல்லி, (பொதுச்செயலாளர், அனைத்திந்திய தாழ்த்தப்பட்டோர், மலைவாழ் மக்கள், தொடர்வண்டித் தொழிலாளர் சங்கம்) சிங்கப்பூர் பாவலர் முல்லைவாணன் ஆகியோர் உரைக்குப் பின், **பாவலரேறு பெருஞ்சித்திரனார்** மிகச் சிறந்ததொரு கருத்துரை யாற்றினார். இவ்வுரையில் பாவலரேறு அவர்கள், இந்தியாவில் பார்ப்பனியம் பத்துக்கும் மேற்பட்ட கட்சிகளாகப் பிரிந்து செயல்படும் வகையினையும் ஆர். எசு. எசு. வின் தமிழினத்திற்கு மாறுபட்ட வினைப்பாடுகளையும் எடுத்துக் கூறித், திராவிடர் கழகத்தினர் தம் கடவுள் மறுப்புக் கொள்கையைச் சிறிது காலத்திற்குத் தள்ளி வைத்துவிட்டுத் தமிழின ஒற்றுமைக்குப் பாடுபடவேண்டும் என்றும், அவர்களின் கடவுள் மறுப்புக் கொள்கையால், நீண்ட நெடுங்காலக் கடவுள் கொள்கையில் ஊறியிருக்கும் தமிழ் மக்கள், அவர்களை வெறுத்துப் பார்ப்பனர்களிடமும், அவர்களின் ஏமாற்றுத் தனமான இந்துமதக் கொள்கைக்கும் அடிமைப் பட்டுப் போகின்றனர் என்றும் வெளிப்படையாக வேண்டுகோள் விடுத்துப் பேசினார். அவர் பேச்சுக்கு விடையளிக்கும் வகையில் தி. க. பொதுச் செயலாளர் திரு. **கி. வீரமணியவர்கள்**, பாவலரேறு அவர்களின் கருத்துக்கு உடன்பாடு தெரிவித்துத் தாமும் தம் கழகத்தினரும், கடவுள் மறுப்புக் கொள்கையைத் தமிழின ஒற்றுமை நலம் கருதிக் கொஞ்ச காலத்திற்கு முகாமைப் படுத்துவதில்லை என்றும் உறுதி கூறினார்.

9. சென்னை, சொல்லாய்வுக் கூட்டம்-2

தமிழ், வடமொழி பிற இந்திய மொழிகளின் ஆராய்ச்சி நிறுவனச் சார்பில், கடந்த 21-3-82 ஞாயிறு மாலை 4 மணியளவில், சென்னை எழும்பூர் மார்சல்சாலையில் உள்ள நிறுவனக்கட்டடத்தில், சொல்லாய்வறிஞர் தமிழூர் **ப. அருளி** வணி. இ, ச. இ அவர்களின் இரண்டாவது, சொல்லாய்வுச் சுற்றுக் கூட்டம், **பாவலரேறு பெருஞ்சித்திரனார்** அவர்களின் தலைமையில் இனிதே நடைபெற்றது. இக் கூட்டத்தில் தாரம், தவம், தைவரல், தூரம், பருதி ஆகிய ஐந்து சொற்களை அறிஞர் திரு. அருளி அவர்கள் மிக விரிவாக ஆராய்ந்து அவை தூய தமிழ்ச் சொற்களே என அறிஞர்கள் வியக்க நிறுவிக் காட்டினார். சென்ற நிகழ்ச்சியைவிட இக்கூட்டத்திற்கு ஏராளமாக அறிஞர்களும், பேராசிரியர்களும், சமசுக்கிருதப் பேரறிஞர்களும் வந்து அரங்கம் நிறைய அமர்ந்திருந்தனர். பேரா. நா. சுப்பு (இரெட்டியார்) சென்னை, செயின் கல்லூரிச் சமசுக்கிருதப் பேராசிரியர் திரு. சீனிவாசனார், புலியூர் கேசிகன் முதலியோர் வந்திருந்தது,

www.thamizham.net - Free E book No 7519

கூட்ட இறுதிவரை அமர்ந்து கேட்டது குறிப்பிடத்தக்கது. இறுதியில் பேரா. பர். **சி. பாலசுப்பிரமணியனார்** அருளியின் சொல்லாய்வுத் திறத்தை மிகவும் பாராட்டித் தொகுப்புரை நிகழ்த்தினார். தமிழ், சமசுக்கிருதப்பேரறிஞர்கள் சிலர் எழுப்பிய ஐயப்பாடுகளுக்கு **அருளி**யும் **பாவலரேறு**வும் தக்க விடைகள் கூறி அமைவு செய்தனர். தொடக்கத்தில் நிறுவன இயக்குநர் பர். **ஆறு. அழகப்பன்** அவர்கள் அனைவரையும் வரவேற்றார். அடுத்த **ஆய்வுக் கூட்டம்** (சுற்று-ரு) வரும் 25-4-82–ஆம் நாளன்று நடைபெறவுள்ளது.

10 இலால்குடி, தி. க. மாநாடுகள்.

கடந்த 28-3-82 ஞாயிறு காலை 10 மணியளவில், திராவிடர் கழகச் சார்பில், திராவிடர் இளைஞர் இனஎழுச்சி மாநாடும் மாலை 8 மணியளவில் பார்ப்பன வல்லாண்மை ஒழிப்பு மாநாடும் திருச்சி, திருத்தவத்துறை (இலால்குடி), திருவள்ளுவர் நகரில் மிகவும் சிறப்புற நடைபெற்றன. மாலை நடந்த பார்ப்பன வல்லாண்மை ஒழிப்பு மாநாட்டிற்கு, தேவகோட்டை, மருத்துவர் சுப்பிரமணியம் தலைமையேற்றார். மாநாட்டில் **அன்பில் தருமலிங்கம்** அவர்கள் பங்கேற்றார். அறிஞர் பலர் கருத்துரைக்குப் பின்னர், **பாவலரேறு பெருஞ்சித்திரனார்** அவர்கள் சிறப்புரையாற்றினார். **கி. வீரமணி**யவர்களின் அரிய கருத்து விளக்கவுரைக்குப் பின்னர் மாநாடு இரவு 2 மணியளவில் சிறப்புற முடிவுற்றது.

11 கணக்கம் பாளையம், திருக்குறள் சங்க ஆண்டு விழா.

கோபிசெட்டிபாளையம் வட்டம், கணக்கம் பாளையத்தில் காமாட்சியம்மன் கோயில் வளாகத்தில் கடந்த 2-4-82 மாலை 6½ மணியளவில் அவ்வூர் திருக்குறள் சங்கத்தின் 18-ஆம் ஆண்டு நிறைவு விழா இனிது நடைபெற்றது. நிகழ்ச்சித் தொடக்கத்தில் பேரா. செ. சு. பழனிச்சாமி க. மு. அவர்கள் நடுவாண்மையில் பட்டிமன்றம் நடைபெற்றது. அதனையடுத்துப் பேரவை நிகழ்ச்சி, சிந்தனைச்செம்மல் திரு. **கு. ச. ஆனந்தன்** வணி., இ., ச. இ. அவர்கள் தலைமையில் நடைபெற்றது. திரு க. வெ. சொக்கலிங்கம் ஆண்டறிக்கை படித்தார். தமிழாசிரியர் துரைசாமி அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார். தலைவரின் முன்னுரையைத் தொடர்ந்து, பாவலர் குமர நடவரச ஈவப்பனார், பேரா. **அரங்கசாமி** க. மு. அவர்களின் உரைக்குப்பின், **பாவலரேறு பெருஞ்சித்திரனார்** அவர்களின் சிறப்புரை நிகழ்ந்தது. திரு. **கா. சுப்பண்ணன்** அவர்களின் நன்றியுரைக்குப்பின் நிகழ்ச்சி இனிது நிறைவுற்றது.

12 மயிலாடுதுறை தி. க. மாநாடுகள்:

கடந்த ஏப்பிரல் 3, 4 ஆம் நாள்களில், மயிலாடுதுறை நகரப் பூங்காவில், திராவிடர் கழகச் சார்பில், பெண்கள் விடுதலை மாநாடு, மாவட்டப் பகுத்தறிவாளர் கழக மாநாடு, பார்ப்பன வல்லாண்மை

www.thamizham.net - Free E book No 7519

ஒழிப்பு மாநாடு, மண்டல் ஆய்வுக்குழு அறிக்கையை நடைமுறைப் படுத்தக் கோரும் மா நா டு - ஆகிய மாநாடுகள் நடைபெற்றன. நான்கு மாநாடுகளிலும் வீ. இரமணிபாய், சுப்புலக்குமி செகதீசன், பேரா. சரசுவதி,பேரா. சக்குபாய் புலவர் கண்மணி, சிவ. இளங்கோ பேரா. கு. வெ. கி. ஆசான், பேரா. நெடுஞ்செழியன், பேரா. வீர பாண்டியன், தாழை மு. கருணாநிதி, பேரா. காதர் முகைதீன், வீ. டி. இராசசேகர் பேரா. ந. இராமநாதன் முதலியோர் கலந்து கொண்டு கருத்துரையாற்றினர். இரண்டாம் நாள் இறுதியில் நடந்த நான்காவது மாநாட்டில் **பாவலரேறு பெருஞ்சித்திரனார்** கருத்துரை யாற்றினார். நான்கு மாநாடுகளிலும் மானமிகு. **கி. வீரமணி** அவர் களின் சிறப்புரை நிகழ்ந்தது.

18 தொலைகாட்சியில் அறிஞர். ப. அருளி:

கடந்த 19-2-82 - ஆம் நாள், சென்னைத் தொலைக்காட்சியில் இரவு 8¼ மணியளவில் நடைபெற்ற வண்ணக் களஞ்சிய நிகழ்ச்சியில் சொல்லாய்வறிஞர் **தமிழூர் ப அருளி** அவர்கள் தமிழ் எழுத்துச் சீர் திருத்தம் பற்றிக் கருத்துரையாற்றினார்.

உ. த. மு. க. செய்திகள்.

உலகத் தமிழின முன்னேற்றக் கழக முதல்வர் **பாவலரேறு பெருஞ்சித்திரனார்** அவர்கள், கழக அமைப்புகளில் மாவட்ட வட்டப் பொறுப்பாளர்களை அமர்த்துதல் தொடர்பாகக் கடந்த மார்ச்சு மாதம் 15, 16 ஆகிய நாள்களில் **தஞ்சை** மாவட்டத்திலும், 23, 24 ஆகிய நாள்களில் **தகடூர்** மாவட்டத்திலும், 25, 26 ஆகிய நாள்களில் **வட ஆர்க்காடு** மாவட்டத்திலும், 27- இல் **திருவண்ணாமலை**யிலும், தீவிர, சுற்றுச்செலவு செய்து, ஆங்காங்கு வந்திருந்த பேராளர்கள், தென்மொழியன்பர்கள், தமிழார்வலர்கள் ஆகியவர்களைச் சந்தித்துக் கலந்துரையாடிப் பெரும்பாலான பொறுப்பாளர்களை அமர்த்தம் செய்து. உள்ளார்.(பட்டியல் தனியே வெளியிடப் பெற்றுள்ளது.)

இப் பொறுப்பமர்த்த ஆய்வுச் சுற்றுச் செலவுத் தொடர்பாகக் கடந்த 81 திசம்பர் மாதத்திலேயே, 16 ஆம் நாள் முதல் 22 முடிய ஏழு நாட்கள், கழக முதல்வர் **பாவலரேறு** அவர்கள் வேம்பாய் (பம்பாய்) சென்று வந்தார்.

அவரின் வேம்பாய்ச் செலவின் பொழுது, தலைமையக அமைப்புச் செயலர் **தென்மொழி ப. துரையரசன்**, திருச்சி மாவட்ட அமைப்புச் செயலாளர் நாரா. மகிழ்நன், பொருளாளர் குழந்தை ஈகவரசன் ஆகியோர் உடன் சென்றிருந்தனர்.

பாவலரேறு அவர்களின் **தஞ்சை** மாவட்டச் சுற்றுச் செலவின் பொழுது, கு. இராசேந்திரன் க. மு, பாவலர் முல்லைவாணன், நாரா. மகிழ்நன், குழந்தை ஈகவரசன் ஆகியோர் உடன் சென்றனர் தஞ்சை சி. அரசிறைவன் அவர்கள், பாவலரேறு அவர்கள் தஞ்சை யில் தங்கியிருந்த இரண்டு நாள்களிலும் அவர்களின் உணவு,

www.thamizham.net - Free E book No 7519

தங்கல் முதலியப் பொறுப்புகளையேற்றுப் புரந்து பேணினர். புலவர் பழனி மாணிக்கனார், தஞ்சை பா. இறையரசன் க. மு. ஆகியோர் கழகப் பொறுப்பாளர் அமர்த்தங்களில் துணையிருந்தனர்.

அவரின், தகடூர் மாவட்டச் செலவை, புலவர். இரா வேங்கடம் க. மு, இர. டேவிட்சன் செயச்சந்திரா அவர்களும் முன்னிருந்து அமைத்துத் துணைநின்றனர். தலைமையக அமைப்புச் செயலர் தென்மொழி ப. துரையரசன் அமைப்பாய்வுகளில் உடனிருந்தார். அமைப்பாய்வுகளுக்குத் துணையிருந்தவர்கள்: புலவர் தே. வே. சந்தானம் க. இ; பாவலர். பெ. மணிவேலன் க. மு.,கோ. அண்ணாத்துரை ஆகியோராவர்.

வடவார்க்காடு மாவட்டச் செலவின்பொழுது பாவலரேறு அவர்கள் வேலூர், சோலை விடுதியில் தங்கியிருந்து அன்பர்களைச் சந்தித்தார். சோலை விடுதியின் உரிமையாளர் திரு. சோலை அவர்கள், உ. த. மு, க. அமைப்புக் கூட்ட நிகழ்ச்சி நடைபெற்ற அறையின் இரண்டு நாள் வாடகை உருபா எழுபத்தைந்தை நன்கொடையாக அளித்துத் தம் அருள் உள்ளத்தைப் புலப்படுத்தினார். கூட்ட அமைப்பிற்குப் பாவலர் இறைவாணன் க.மு. பெரிதும்துணை நின்றார்.பாவலரேறுவுடன் அமைப்புச் செயலாளர் தென்மொழி ப. துரையரசன் வந்திருந்தார். அமைப்பு ஆய்வு அமர்த்தங்கள் நிறைவு பெற உதவியவர்கள் நெமலி மா. செ. தமிழ்மணி, மு. கதிரவன், குமர. தன்னொளியன், ச. ந. ச. மார்த்தாண்டன் ஆகியோர்.

வடவார்க்காடு மாவட்டம் தெற்குப்பகுதியின் அமைப்பு ஆய்வுக் கூட்டத்தை ஏற்பாடு செய்தவர் மு. உலகமுதல்வன் (செகந்நாதன்) பாவலரேறு தங்கி யிருக்க பூங்கா விடுதி (Park Lodge) அறையை நன்கொடையாக அளித்திருந்தார் அவ்விடுதி உரிமையாளர். அமைப்பாய்வுக்கு உதவியவர்கள் திரு.மு.உலக முதல்வன்,எசு,சந்திரசேகரன் வணி இ; ஆகியோர். அமைப்புச் செயலாளர் உடன்வந்திருந்தார்.

கழக முதல்வர் பாவலரேறு அவர்களின் அடுத்த அமைப்புக் கூட்டச் சுற்றுச் செலவு அறிக்கை வேறு பக்கத்தில்.

பிற செய்திகள்

1. திருக்குறள் மன்றம்-பல்லடம்:

கடந்த மீனம் க, (14-3-৪2) மாலை 6-30 மணியளவில், பல்லடம் திருக்குறள் மன்றத்தின் 4-ஆம் ஆண்டு நிறைவு விழா திரு. இ. வெ. கி. ஆசான் க, மு. அவர்கள் தலைமையில் நடைபெற்றது. நிகழ்ச்சி தொடங்குவதற்கு முன் பாவிசைச் செல்வர் திரு. நெறிமுடியார் க. மு. அவர்களின் இசையரங்கம் நடைபெற்றது. திருவாளர்கள் திருக்குறள் முனிசாமி, பர். சு. சிவகாம சுந்தரி க. மு., பர், ந, வெள்ளிமலை ஆகியோர் சிறப்புரை நிகழ்த்தினர்.

www.thamizham.net - Free E book No 7519

2) பாவாணர் நினைவு விழா-அமரர் பூண்டி.

சென்ற கும்பம் க.(13-2-82) அமரர்பூண்டியில், மொழிஞாயிறு பாவாணர் நினைவு விழா, மாலை 6 மணியளவில் மறைமலையடிகள் திடலில் திரு,கண்ணுச்சாமி தலைமையில் நடைபெற்றது.'தமிழ்ச்சுடர்' ஆசிரியர் மணிமுத்து வரவேற்புரையாற்றினார். திருவாளர்கள் முத்தழகர்சாமி க. மு; வலதூரார்; சு. கணேசன், செ. காளிமுத்து அறி. இ; கா. சு. மணியன், சீ. தாமரைக்கண்ணன் வணி. மு. புலவர், பூங்குன்றனார். ஆகியோர் கலந்துகொண்டு கருத்துரையாற்றினர். இறுதியில் உ. த. மு. க. பற்றிய விளக்கம் கூறி, மணிமுத்து அவர்கள் நன்றியுரை யாற்றினார்.மேடையின் பின்னணியில் திருவாளர்கள் பாலுதென்னவன், அருணச்சலம், கா. சு. மணியன் முதலியோரால் உருவாக்கப்பெற்ற பெரிய அளவிலான உ. த. மு. கழகக் கொடி அனைவருடைய கண்ணையும் கருத்தையும் கவர்ந்தமை குறிப்பிடத்தக்கது. நிகழ்ச்சிக்குப் பின் திரு, கணபதி குழுவினரால் 'மொழி தோன்றுமுன் மாந்தனின் நிலை'என்னும் நாடகம் நடத்தப்பெற்றது.

3) தனித்தமிழ்க் கழகம், புதுச்சேரி.

கடந்த சுறவம் உரு (7-2-82)புதுச்சேரி, தனித்தமிழ்க் கழகத்தின் பொதுக்குழுக் கூட்டம் நடைபெற்றது. புதிய பொறுப்பாளர்களாக, க. தமிழமல்லன் க. இ. (தலைவர்) சீனு. அரிமாப்பாண்டியன் (செயலர்), முத்துசேரன் (பொருளர்) ஆகியோர் தேர்ந்தெடுக்கப் பெற்றனர். திரு. வி. க. நூற்றுண்டு விழா, பாவாணர் விழா, மறைமலையடிகள் விழா, பெருஞ்சித்திரனார் பொன்விழா ஆகியவற்றை நடத்துவதென்றும். தமிழ் வளர்ச்சித்துறை அமைக்கவும், தமிழை ஆட்சிமொழி யாக்கவும், பிறப்பு இறப்புச் சான்றுகளைத் தமிழில் வழங்குமாறும் புதுச்சேரி அரசை வலியுறுத்த பலவகை முயற்சிகள் மேற்கொள்வதென்றும் தீர்மானங்கள் இயற்றப் பெற்றன.

4) தமிழ் ஆய்வரங்கம்-புதுச்சேரி.

கடந்த 28-2-82 ஞாயிறு மாலை 6 மணியளவில் புதுச்சேரி வணிக அவை மன்றத்தில் தமிழ் ஆய்வரங்க முதல் நிகழ்ச்சி நடந்தது. புலவர் சுந்தரசண்முகனார், புலவர் திருமுருகன், புலவர் தி. நா. அறிவுஒளி, புலவர் அரிமதி தென்னகன், பேரா. ம. இலெ. தங்கப்பா ஆகியோர் கலந்து கொண்டு பல்வேறு தலைப்பின் கீழ் ஆய்வுரை நிகழ்த்தினர், கா. வில்லவன் நன்றி கூறினார். ஆராய்ச்சியும்-ஆக்கமும் இணைந்தியங்க இவ்வரங்கம் பணியாற்றும் என அதன் அமைப்பாளர் தி. நா. அறிவுஒளி க. மு கல். இ. தெரிவிக்கிறார்.

நன்கொடைகள்

1, சென்னை, இந்தியத் தொழில் நுட்பக் கழகத்தில், திரு. அ. ஆறிறைவன், அறி. மு. தம் ஆராய்ச்சிப் படிப்பினை வெற்றியுடன் முடித்

www.thamizham.net - Free E book No 7519

துப் பண்டாரகர் (Ph. D) பட்டம் பெற்றதன் நினைவாகத் தென்மொழி வளர்ச்சிக்காக உருபா 50 ஐ நன்கொடையாக விடுத்துள்ளார் அவர் அன்புள்ளத்தைத் தென்மொழி பல்லாற்றானும் நன்றியுடன் வாழ்த்துகிறது. திரு. ஆறிறைவன், இந்திய அரசின் கல்வி அமைச்சகத்தின் மூலமாக, அமெரிக்காவில் வேதியல் ஆராய்ச்சிக்காக, (Fulbright Fellowship) கிடைக்கப் பெற்று, மசாசூசெட்சு தொழில் நுட்பக் கழகத்தில் ஓராண்டு ஆராய்ச்சி செய்யும் வாய்ப்புப் பெற்றவர் என்பது குறிப்பிடத் தக்கது.

2. சின்னசேலம், மருத்துவர் அ. விவகானந்தன் மரு, இ; அறு, இ. அவர்கள் தம் துணைவியார் திருவாட்டி தாமரைச்செல்வி (பத்மினி தேவி) அறி. மு. அவர்களின் பிறந்த நாளில் தம் துணைவியுடனும் குடும்பத்துடனும் ஆசிரியர் பாவலரேறு அவர்களிடம் வாழ்த்துப் பெற்று, உருபா நூற்றை அன்பளிப்பாக வழங்கினார். திருவாட்டி தாமரைச் செல்வியும், அவர் கணவரும் எல்லா நலமும் வளமும் வாய்க்கப் பெற்று இனிதே வாழ தென்மொழி நிறைந்த நெஞ்சுடன் வாழ்த்துகிறது

5-10- 81 முதல் 5-4.82 வரையிலான நன்கொடை வரவுகள்

1)	1-10-81	சென்னை, குறளடியான்-பாவின் ஆகியோர்க்கு நடந்த திருமண நினைவாக	100-00
2)	6-10-81	முகவை, தமிழாசிரியர் இரா. சிவசண்முகம்-கலாவதிக்கு 17-9-81-இல் ஆண்மகவு பிறந்ததன் நினைவாக	25-00
3)	8-11-81	செ. கண்ணன், சென்னை-15.	25-00
4)	9-11-81	முகவை, சிவசண்முகம் தமது ஆண்மகவுக்கு பரிமேலழகன் எனப்பெயரிட்டதன் நினைவாக	20-00
5)	21-11-81	கொடியாலம் புலவர் பழ- செல்வன் பணி யமர்த்தம்பெற்றதன் நினைவாக	5-00
6)	18-12 81	படைத்துறை க. உலகதாசன் C/o 56APO	5-00
7)	30-12-81	ந இளஞ்செழியன். கருக்காடிபட்டி	50-00
8)	1-1-82	அரசேந்திரன், வெங்காலூர் (திசம்பர், சனவரி)	15 00
9)	1-1-82	அ. பு. திருமாலன், மலேசியா	5-00
10)	6-1-82	தென்னவன், பேலைச்சிவபுரி	2-00
11)	16-1-82	நா. இளமாறன்; கோனேரிப்பட்டி	150 00
12)	27-1-82	ப. காந்தி, வெங்காலூர்	6-00
13)	2-3-82	இரணியன் கோவை (அக்-நவ-திச-சன-பெப் மார்ச்சு-மாத நன்கொடை)	60-00
14)	29-3-82	மா. இலக்குவன், புதுவை	5-00
15)	2-4-82	மெய். அருண்மொழியன், தங்கச்சிமடம்	15-00
16)	5-4-82	அ. பெரியராமு, சிங்கை	35-00

www.thamizham.net - Free E book No 7519

தமிழ் நாட்டினத்திற்குப் பொருந்திய பொதுவுடைமை

வெங்கலூர் 'குணா'

ஒரு பானைக்கு ஒரு சோறு பதம்! இஃது எதைக் காட்டுகிற தெனின், பெரு முதலாளிக் குடும்பங்களாக இருக்கும் பார்ப்பன, புதிய பார்ப்பனத் தொழிற் குடும்பங்கள் நடத்துகின்ற குழுமங்களில் பெரும் பகுதிப் பங்குகள் இந்தியாவிற்கு அப்பால் இருக்கின்ற முதலாளிகளுக்கும் வட இந்திய முதலாளிகளுக்கும் சொந்தம். இத்தகைய பார்ப்பனர் தொழிற் குடும்பங்களும் பிறவும் மாற்றானுக்குத் தரகர்களாக இருக்கின்ற துணைக் கூட்டாளிகளே, கூட்டுக் குடுக்கிகளே என்பது இதனால் புலப்படுகின்றது. தமிழகத்தில் நேரடியாக மேலைநாடுகளே கிளையாக நடத்துகின்ற பெருந் தொழில்களைச் சொல்லத் தேவை இல்லை. இந்நிலையில், தமிழகப் பெரு முதலாளி பெரிதாக முற்றுடைமை நிலைக்குத்தாறக வளர்ந்து விட்டான் என்பது பெரும் பொய்.

அவ்வகையில், தமிழகத்தின் தொழில்கள் முழுதும் மாற்றா-ரிடம் இருக்கின்றன. தமிழகத்தின் தொழில் இடு பொருட்களும் இயற்கை வளங்களும் உழைப்புத் திறனும் பிறரால் கொள்ளை கொண்டுப் போகப்படுகின்றன. பிற நாட்டு முதலுடன் தொழிற்கூட்டு இல்லாத ஒரு சில நாயுடு, நாட்டுக் கோட்டைச் செட்டி, நாடார் முதலீட்டாளரை மட்டுமே தமிழகத்தின் தேசிய முதலாளிகள் என்று குறிப்பிட முடியும். கைத்தறித் தொழிலைத் தேசிய முதலீடாகச் சொல்லலாம்.

பணமுதலீட்டில் (Finance capital) மார்வாரிகள் பங்கு ஆல் போல் பெருத்து வருகின்றது.

உழவுத் துறையில் பசுமைப் புரட்சித்திட்டம், உயர் விளைச்சல் வகைத் திட்டம், பல பயிர் வேளாண்மைத்திட்டம், தென்னை வளர்ச்சித்திட்டம் பழ வளர்ச்சித் திட்டம், காய்கறி வளர்ச்சித் திட்டம், பருத்தித் திட்டம், எண்ணெய் வளர்ச்சித் திட்டம், பயன்தரும் பூச்சி வளர்ப்புத் திட்டம், வணிகப் பயிர்களின் பெருக்கம் போன்றனயாவும் முதலாளிய பணக்கார உழவர்களை வளர்க்க உதவியுள்ளன. அவற்றின் வாயி-லாகச் செயற்கை உரங்கள், நீரிறைப்பிகள், எண்ணெய்ப் பொறிகள், எந்திரக் கலப்பைகள், உழுவூர்திகள், தெளிப்பான்கள், பூச்சிக்கொல்லிகள் போன்றவற்றைப் பயன் படுத்துவது பெருகி வருகின்றது. இவையாவும் பன்னாட்டின் (Multinational) முதலாளியக் குழுமங்கள் தமிழகத்தின் நாட்டுப் புறத்தின் உள்ளே புகுவதை முடுக்கவும் அடக்க விலையைக் கூட்டவும் செய்துள்ளன. இருப்பினும், பழைய நிலக்கிழார்களும் இடைத்தரகர்களும் பல இடங்களில் வலிமையுடன்

இருக்கத்தான் செய்கின்றனர். உழவுத்தொழிலில் பழைய சாதி முறையைப் பயன்படுத்துவதும் வலுப்படுத்துவதும் உலகறிந்த உண்மை. தமிழகத்தில் அதனால் உழவு 'முதலாளிய உழவு' என்னும் இயல்பு மாற்றத்தை இன்னும் முழுமையாக எட்டி விடவில்லை. அஃது அரை நிலக்கிழமைத் தன்மையைக் கொண்டதாகவே இன்னும் இருக்கின்றது. உழவர் எனச் சொல்லப்படுபவர் மேல் சாதிக்காரரே என்று குறிப்பிடும் அளவுக்குத்தான் இன்னும் நிலைமை இருக்கின்றது. தீண்டப்படாத சாதியினரும் தீண்டத்தக்க பிற கீழ்ச் சாதியினரும் நாட்டுப்புற உழைக்கும் மக்களில் பெரும் பாலோராகவும் நிலமற்ற உழவர் கூலிகளாகவுமே பெரிதும் இருக்கின்றனர்.

இந்நிலையில், கொள் முதல் விலையைக் கையாலாகாதத் தமிழக மாநில அடிமை அரசு தீர்மானிக்கின்ற நிலை இல்லை. அதனைத் தில்லி துணை வல்லரசே நேரடியாகச் செய்கின்றது. தில்லி துணை வல்லரசு முடிவு செய்கின்ற கொள்விலை, உழவர்களின் அடக்க விலையையும் பார்க்க மிக்க குறைவாக இருப்பதனாலும், வரிச்சுமை மிகுந்திருப்பதனாலும், தமிழக உழவர்கள் போர்கோலம் கொண்டு நின்றதுண்டு. அந்நிலையில் மாற்றமில்லை. தில்லிப் பேரரசிடம் தமிழக வேளாண் துறையும் அடிமைப்பட்டுக் கிடக்கும் வரையில் உழவுத் துறையில் அமைதியும் பெருக்கமும் காண்பது அரிது.

பண்பாட்டுத் துறையிலும் கல்வித் துறையிலும் அறிவுத்துறையிலும் கூட தமிழகம் வட இந்திய வல்லரசிடம் அடிமைப்பட்டுக் கிடக்கின்றது. இந்திப் பண்பாடும் மேலைப் பண்பாட்டின் அழிவுக் கூறுகளும் புதியபார்ப்பனியமும் தமிழகத்தின் குடியாட்சிமரபுகளையும் அழித்து வருகின்றன. தமிழரின் தன்மான உணர்ச்சி அதனால் மங்கி வருகின்றது. அடிமைப் பண்பாடு விரிவடைந்து வருகின்றது.

இந்நிலையில் தமிழகத்தில் வாழ்வியல் அடிப்படையை எவ்வாறு கணிப்பது?

முற்றடிமைப் பட்ட அரை நிலக்கிழமைப் பொருளியலே தமிழகத்தின் பொருளியல் என்பதே அதனால் பிறக்கின்ற தெளிவு. அந்நிலையை மாற்ற, வல்லரசுகளின் புகுவாயிலாக இருக்கின்ற தில்லி துணை வல்லரசை எதிர்க்கின்ற வல்லரசு எதிர்ப்புக் கடமையோடு நாட்டுப்புறத்தில் விளங்குகின்ற அரை நிலக்கிழமை முறையை எதிர்க்கின்ற கடமையையும் ஆக்க முறையில் ஒருங்குறச் செய்வதே தமிழகத்தின் தளை அறுக்கும். அத்தகைய வல்லரசு எதிர்ப்பு - நிலக்கிழமை எதிர்ப்பு நிலையில் அணைத்தும் தழுவியதொரு புரட்சியை நடத்தாமல் தமிழகம் இன்றைய அவலங்களிலிருந்து மீளப் போவதில்லை. அதுவுமின்றி, நேரடியாக ஒப்புரவியல் (சோசலிச) வாழ்வியலுக்குள் தமிழகம் புகமுடியாது. ஒப்புரவியல் வாழ்வியலை அமைப்பதற்கு முன்னர் தமிழகத்தில் திராவிட இயக்கம் உசுப்பிவிட்ட முதலாளியக்

www.thamizham.net - Free E book No 7519

குடியாட்சிப் புரட்சியை அதனுடைய அளவையியல் முடிவுக்குக் கொண்டுச் செல்ல வேண்டும். தமிழகப்புரட்சி இருபடிகளைக் கொண்டதாக இருக்கும். முதல்படி, தமிழகப் பாட்டாளிய வகுப்புத்தலைமையில் முதலாளியக் குடியாட்சியை நிறைவுறச்செய்வது என்னும் புதிய குடியாட்சிக் கட்டம்

புதிய குடியாட்சிக் கொள்கையில் இரு நிலைகள் உண்டு. வல்லரசு எதிர்ப்புக் கடமை முதன்மைக் கூறாகவும் நிலக்கிழமை எதிர்ப்பு அதற்குள் அடங்கிய அடுத்த கூறாகவும் இருப்பின், அதற்குத் **தேசிய குடியாட்சிப் புரட்சி** என்று பெயர். அப்போது ஒருநாட்டின் தரகரைத் தவிர்த்துப் பிற வகுப்புகள் யாவும் உள்ளிட்ட அந்நாட்டு மக்களுக்கும் அந்நாட்டை நேரடியாகப் பிடித்தாள்கின்ற புறவல்லரசுக்கும் இடையிலான முரண்பாடு முதன்மை முரண்பாடாக இருக்கும். அதைத் தீர்த்து வைக்க வல்லது **தேசிய விடுதலைப் போர்**

மாறாக, நிலக்கிழமை எதிர்ப்புக் கடமை முதன்மைக் கூறாகவும் வல்லரசு எதிர்ப்பு இரண்டாம் கூறாகவும் இருப்பின், அப்புரட்சி **மக்கள் குடியாட்சிப்புரட்சி** என்று பெயர்பெறும். நிலக்கிழமைக்கும் நிலக்கிழமையை எதிர்க்கின்ற பெருந்திரள் மக்களுக்கும் இடையிலான முரண்பாடே அங்கு முதன்மை முரண்பாடாக இருக்கும். **மக்கள் விடுதலைப்போர்** என்னும் நிலப்புரட்சியே அதற்குரியத் தீர்வு.

அவ்வகையில் முற்றாக அடிமைப்பட்டுக் கிடக்கின்ற தமிழகப் புரட்சி, தேசிய குடியாட்சிப் புரட்சியாகின்றது. அதற்கு இசைய, அமைப்புகளும் போர்தந்திரங்களும் செயல்தந்திரங்களும் மாறுபடும். தமிழக மக்களுக்கும் தமிழகத்தைச் சுரண்டி அடக்கி ஆள்கின்ற தில்லித் துணை வல்லரசுக்கும் இடையிலான முரண்பாடே இன்றைக்குத் தமிழகத்தின் முதன்மை முரண்பாடு.

தமிழகத்தில் தேசிய குடியாட்சிப் புரட்சியை வழிநடத்த விடுதலையை வேண்டுகின்ற நட்பு வகுப்புகள் எவையெவை என்பதையும், விடுதலையை எதிர்க்கின்ற பகை வகுப்புகள் எவையெவை என்பதையும் நன்கு ஆய்ந்து முடிவு செய்தல் வேண்டும். அதனடிப்படையில் விரிவானதொரு கூட்டணியைக் கட்ட வேண்டும் விடுதலை எய்துவதற்கான ஏற்புடைய போராட்ட முறையைத் தேர்ந்தெடுக்க வேண்டும். பரந்து பட்ட மக்களியக்கமாக அஃது உருவாக வேண்டும். அறிவிலும் செயலிலும் பிறரை முற்றுமாகப் பிறரைச் சாராத தற்சார்புடையதாக அஃது இருக்க வேண்டும். தமிழ் நாட்டினத்தினற்கு உகந்த பொதுவுடைமைக் கோட்பாடு அவ்வழியிலான ஆய்வுகளின் வாயிலாகவும் செயற் பாடுகளின் விளைவாகவும் இருக்கும். அத்தேசிய விடுதலைக் கடன், பார்ப்பனிய வழி நிற்கும் நிலக்கிழமை எதிர்ப்பையும் உள்ளடக்கியதாகவும், சாதிவெறி குமுகத் தலைகளை உடைக்கும் வகையில் வகுப்புப் போருடன் ஒன்றியதாகவும் இருக்கும்.

(முற்றும்)

www.thamizham.net - Free E book No 7519

'கோல்கனிஸ்தானம் கோரி கிளர்ச்சி'

பீகாரில் சிங்பும் மாவட்டத்திலுள்ள கைல்பாசா நகரின் இரண்டு வழக்குரைஞர்கள் நாட்டிற்கு எதிராகச் சூழ்ச்சிவேலையில் ஈடுபட்டிருப்பதாகத் தளைப்படுத்தப் பெற்றுள்ளனர். அவர்கள் சில மாதங்களுக்கு முன் எழுப்பப் பெற்ற தனிக் கோல்கனித்தான கோரிக்கையோடு தொடர்புடையவர்கள் என்று அறியப்படுகிறது.

நாராயண் சோங்கோ என்பவரும் சி. ஏ. டோப்னோ என்பவருமாகிய இரு வழக்குரைஞர்களும் அவ்வியக்கத்தின் தீவிரமானவர்கள் என்று கூறப்படுகிறது. அதில் ஒருவர் 'கோல்தான் அரசின்' தலைமைச்சட்ட 'கருத்தாளர்' ஆக அமர்த்தப்பட்டிருக்கிறார். சென்ற சில மாதங்களுக்கு முன் அவ்வியக்கத்தின் இருபடி நிகராளிகள் இங்கிலாந்து சென்று பிரிட்டன் அயல்துறை அலுவலகத்தில் ஒரு கோரிக்கை அறிக்கை அளித்திருக்கின்றனர். இது பற்றி மாநில அரசும் நடுவணரசும் இதுவரை அமைதி காத்து வந்தது வியப்பளிக்கின்றது.

1947 இல் இந்தியா விடுதலை பெற்றபொழுது சிங்பும் மாவட்டத்தைச் சேர்ந்த கோல்கன் பகுதி இந்தியாவிடம் ஒரு போதும் ஒப்படைக்கவில்லையென்று அவ்வறிக்கை கூறுகிறது. எனவே அனைத்து அதிகாரங்களும் கோல்கன் அரசுக்கே வழங்கப்பட வேண்டும்.

இம் மாவட்டத்திலுள்ள புதிய அமைப்பாகிய கோல்கன் பாதுகாப்பு(மீட்பு)க் கழகத்(Kolhan Raksna Sangha)தின் ஆதரவில் இக்கிளர்ச்சி முகிழ்த்திருக்கின்றது.

சென்ற செப்தம்பர் மாதம் இவ்வியக்கத்தின் இரண்டு படி நிகராளிகள் பிரிட்டனின் அயல்துறை மற்றும் பொது நலக் கூட்டமைப்பின் தெற்காசியத்துறைச் செயலாளரைச் சந்தித்தனர்.

அவர்கள் செனிவாவுக்குச் சென்று ஒன்றிய நாடுகளின் அமைப்பிலும் விண்ணப்பம் அளித்துள்ளனர். கோல்கன் பகுதியின் ஆளுகையில் தலையிடுவது என்பது அதன் இறைமையில் ஓர் அயல் ஆளுமையின் தாக்கமாகக் கருதப்படும் என்று அக்கழகம் வெளியிட்டுள்ள தெளிவான அச்சிடப்பட்ட துண்டு வெளியீடு கூறுகின்றது.

உலக மாநாட்டுத் திட்டம் (World meet Planned)

திசம்பர் மாதத்தில் 'கோல்கனித்தானம்' பற்றியஓர் உலகமாநாடு நடத்தப்பெறும் என்றும் அவ்வறிக்கை கூறுகிறது. அத்துண்டறிக்கை இராஞ்சியிலுள்ள G. E. L. சர்ச் அச்சகத்தில் அச்சிடப்பெற்றுள்ளது. பிரிட்டன் ஆட்சியின் போது நடைமுறையில் இருந்த வில்கின்சன் சட்டம் 47 இல் அதிகார மாற்றத்தின் பொழுது மாற்றப் பெறவில்லை என்று அக்கழகம் கூறுகிறது.

அச்சட்டம், கோல்கன் பகுதியின் காவல், மற்றும் நயன்மைத் துறையின் அதிகாரத்தை அவ்வட்டார மாங்கியர்களுக்கும், முண்டாக்களுக்கும் வழங்குகிறது.

www.thamizham.net - Free E book No 7519

விடுதலைக்குப் பின்னர் அச்சட்டத்தைத் தள்ளுபடி செய்த 'உத்தரவு' ஏதேனும் உள்ளதா என்பது தெரியவில்லை.

அண்மையில் இவ்வியக்கம் அப் பகுதி நாட்டுப் புற மக்களின் கவனத்தை ஈர்க்கும் வரை, அம்மாநில அரசு அவ்வியக்கத்தைப் பற்றிக் கண்டு கொண்டதாகத் தெரியவில்லை.

சிங்புமில் இருமுறை காவல் துறையினரைப் பழங்குடியினர் தாக்கிய பொழுது இருமுறை துமுக்கிச்சூடு நடைபெற்றதாகவும், சாவு ஏதுவும் நிகழவில்லை எனவும் காவல்துறை அறிக்கை கூறுகிறது. சென்ற ஆண்டு செப்தம்பர் மாதத்தில்'குவா' பகுதியில் நடுவணரசுக்காவல் வீரர்கள் ஏன் வில்,அம்புகளால் தாக்கப்பட்டனர் என்பது புரியாத புதிராக இருக்கின்றது.

நான்காண்டுகளுக்கு முன்னால் 'கோபில்கரா'வில் நடைப்பெற்ற இன்னொரு நிகழ்ச்சியும் புரட்சியின் முதல் அறிகுறியாகும்.

இவையெல்லாம் சிங்பும் பகுதியில் ஏதோ சரியில்லை என்பதைக் காட்டுகின்றன.

'சார்கண்டுக் கோரிக்கை :-

தனிக் கோல்கனித்தான முழக்கமான சார்கண்டு விடுதலை கனிந்திருக்கின்றது. அணியினரைப் பெரிதும் கவர்ந்திருக்கிறது. பாராளு மன்ற உறுப்பினர் திரு. என். இ. ஒரோ அவர்களின் தலைமையில் இயங்கும் சார்கண்டு கட்சி, சார்கண்டு கோரிக்கை நாள் பேரணி ஒன்றினை அண்மையில் இராஞ்சியில் நடத்தியது. அண்டை மாநிலங்களாகிய மேற்கு வங்கம், ஒரிசா, நடுவண்பைதிரம் ஆகிய பகுதி வாழ் மக்கள் அப் பேரணியில் கலந்து கொண்டனர்.

இராஞ்சியிலுள்ள தென் சோட்டா நாகபூரின் கோட்ட ஆணையாளரிடம் அக்கட்சி ஒரு கோரிக்கை வேண்டுகோளையும் அளித்துள்ளது. ஒரு தனி சார்கண்டு மாநிலமே பழங்குடி மக்களை நிறைசெய்ய முடியும் என்பதை அவ்வேண்டுகோள் தலைமையமைச்சருக்குத் தெள்ளத் தெளிவாக சுட்டிக் காட்டுகின்றது.

கோரியுள்ள சார்கண்டு மாநிலத்திலுள்ள மூன்று கோடி மக்கள் தொகையில் 75/ ஒரேஇன உறவுக் குழுவினர் ஆவர் என்று அக்கட்சி கூறுகிறது. சார்கண்டுப் பகுதியின் குமுகப் பொருளியல் வாழ்க்கையின் பிரிக்க வொண்ணுப் பகுதியினராகிய இவர்கள் ஒரு தனித் தேசிய இனத்தவராவர்.

வகுப்புத் தேசிய அடக்கு, ஒடுக்கு முறைகளினின்று இவர்கள் விடுதலை பெறுவது அடிப்படையில் ஒரு தேசிய சிக்கலாகும். எனவே சார்கண்டினர் ஒரு தேசிய இனத்தவர் என ஏற்பளிக்கப் பெற்று அவர்களுக்குத் தன்னாட்சி பெற்ற தனிச்சார்கண்டு மாநில அரசே!இச்

www.thamizham.net - Free E book No 7519

என்று தான் தீருமோ எந்தமிழர் தீங்கு?

— சிறுவை இறையரசன்

ஈழத் திருமண்ணில் எங்கள் தமிழினந்தான்
சூழத் தனியரசு தோற்றுவிக்கும் — சூழலும்
நேராதோ? சூழ்ச்சியும் வீழாதோ? என்றுதான்
தீருமோ, எந்தமிழர் தீங்கு?

செந்தமிழ்ப் பெண்களின் செம்மைசால் கற்பதனை
நொந்தழியத் தீய்கின்றான் சிங்களத்தான் — வெந்தழியக்
கண்ணில் அனல்தேக்கிக் கையில் உரந்தேக்கி
வண்டமிழா வாளெடுத்து வா!

இடையில் கடலோர் தடையா? தமிழர்
படையதனைச் சிங்களத்தான் கொல்லும் —கடைச்செயலை.
வேரோடு கிள்ளிடவே வெற்பெடுக்கும் தோள் தமி
கூரான வேல் கொண்டே கூடு!

ஆண்ட தமிழன் அடிமையாய் நோகின்றான்
ஈண்டு தமிழன் எவன்தாளோ — தீண்டுகிறான்
வீணர் கிடக்கட்டும் வீரர் எழுவீரே
காணட்டும் வீரம் களத்து

வங்கத்தை வாழவைத்த வான்புகழ் இந்தியத்தாய்
எங்கள் தமிழினத்தை மீட்டேயோர் — மங்காத்
தமிழரசை ஈழத்தில் தந்திடலே செங்கோல்!
அமிழ்தனைய அந்நாளும் என்று?

(முன்பக்கத் தொடர்ச்சி)

சிக்கலைத் தீர்க்க வியலும் என அக்கட்சி கூறுகின்றது.

இவற்றின் பின்னணியில் சார்க்கண்டுக்கட்சி,கோல்தன் கழகம், சார்கண்டு விடுதலை அணி இம்மூன்றின் கூட்டணி அமைப்பு இயலக்கூடியதே. இது நிகழுமேயானால், அப்பொழுது பிகார், ஒரிசா வங்காளம், நடுவண்பைதிரம் இவற்றின் தொழில் பகுதிகள் முழு மையிலும் பெருங்குழப்பம் ஏற்படலாம்.

தமிழில் : ந. முத்துக்குமரன்.
செய்தி: 'The Hindu' 17-12-81.

அன்பர்கள் கவனிக்க

பேராசிரியர் அவர்களை வந்து காணவும், கண்டு பேசவும் விரும்பும் அன்பர்கள், காரி, ஞாயிறு ஆகிய நாள்களில் மாலை 5மணிக்குமேல் வருமாறு கட்டாயம்கேட்டுக் கொள்ளப்பெறுகிறார்கள்.

— அமைச்சர்.

www.thamizham.net - Free E book No 7519

(சுவடி 17, ஓலை 12-இன் தொடர்ச்சி) தொடர்: 6.

சிலம்பிற் பிழையா?

— புலவர். இறைக்குருவனார்.

தடையாகுமா?

"வையெரி மூட்டிய ஐயை தன்னொடு
கையறி மடைமையிற் காதலற் காக்கி"

என்றலால் கண்ணகி சமைக்கத் தொடங்கியகாலை ஐயை அவட்கு அடுப்பு மூட்டிக்கொடுத்துத் துணை செய்தாள் என்றும், கோவலன் உணவுகொள்ளுங்கால்

"ஆயர் பாடியின் அசோதைபெற் றெடுத்த
பூவைப் புதுமலர் வண்ணன் கொல்லோ
நல்லமு துண்ணும் நம்பி ஈங்குப்
பல்வளைத் தோளியும் பண்டுநங் குலத்துத்
தொழுநை ஆற்றுள் தூமணி வண்ணனை
விழுமந் தீர்த்த விளக்குக் கொல்லென
ஐயையுந் தவ்வையும் விம்மித மெய்திக்
கண்கொளா நமக்கிவர் காட்சி ஈங்கு"

என்று வியந்தும் மகிழ்ந்தும் பேசினர் என்றும் கொலைக்களக் காதையிலும், மாதிரி ஐயையை நோக்கி

"மண்ணின் மாதர்க்கு அணியாய
கண்ணகியுந் தான்காண..........
குரவை ஆடுவதும் யாம்"

என்று கூறினளென ஆய்ச்சியர் குரவையிலும் கூறியுள்ளமையான் அவை, கோவலன் பிரிந்து சென்ற அற்றைமுற்பகலே குரவைக் கூத்தும் நடைபெற்றதென்றற்குத் தடையாக மாட்டாவோ எனின், ஆகமாட்டாமை காட்டுதும்.

கண்ணகியின் சமையலுக்கு ஐயை அடுப்பு மூட்டிக்கொடுத்ததும் துணைநின்றதும் அற்றைச் சிறுகாலைப் பொழுதிலேயாம். தீக்குறி கண்ட மாதரி ஐயையை விளித்து அதுபற்றிக் கூறி யாம் குரவை யாடுதும் என்று கூறியதும் ஏறத்தாழ அப்பொழுதே எனலாம். கோவலன் உணவு கொள்ளுங்கால் ஐயையும் தவ்வையும் விம்மிதம் எய்திப் பேசிக் கொண்டதும் சிறுபொழுதைய நிகழ்ச்சியேயாம். ஆகவே இவை நிகழ்ந்த சிறுநிகழ்ச்சி ஆய்ச்சியர் குரவைக்கு ஆவன செய்தற்கு இடையூறு மாறில்லை.

ஐயையும் மாதரியுமோ, இருவருள் ஒருவர் மட்டோகடி மனையிலேயே தொடர்ந்து இருந்தனர் என்று ஆசிரியர் யாண்டும் கூறிற்றிலர். எவ்வாற்றாலும் பெறப்படவும் மாட்டாது. அன்றியும் கோவலன் உண்டது கண்டு அவர்கள் பேசிக்கொண்டபின் அவ்விடத்தினின்றும் நீக்கி விட்டனர் என்பதும், மீண்டும் அவர்கள் ஆண்டு வந்திலர் என்பதும் கோவலனுங் கண்ணகியும் பழைமை நினைந்து பேசிக் கொண்டமையானும், கோவலன் பிரியுமுன் அவளை ஒருங்குடன்

www.thamizham.net - Free E book No 7519

தழுவியமையானும் அறியப்படும். ஆகவே குரவைக் கூத்துக்கு முற்பட்ட மேற்கூறிய ஐயை மாதரி தொடர்பான காலைப்பொழுதைய கடிமனை நிழ்ச்சிகள் கோவலன் பிரிவும் குரவைக்கூத்தும் ஒரு நாளைய நிகழ்ச்சிகள் என்றற்குத் தடையாக மாட்டா என்று கண்டு கொள்க,

குரவைக் கூத்து எப்போது?

கடிமனையிற் கண்ணகி அடுதொழிலில் ஈடுபட்ட அற்றைச் சிறு காலைப்பொழுதிலேயே மாதரியும் தயிர்கடையச்சென்று, தீக்குறிகண்டு கண்ணகிக்கு அடுப்பு மூட்டிக் கொடுத்து, அடுவினைக்குத் துணைநின்ற ஐயையை விளித்து தீக்குறி பற்றிக்கூறி, வருவதொன்றுண்டெனக் கொண்டு, அது நீங்குமாறு கண்ணகியுங்காணக் குரவையாடுதும் யாம் என்று கூறினுள் என்பதும், பின் அவர்கள் குரவைக் கூத்திற் குரிய ஏற்பாடுகளைச் செய்துகொண்டிருந்தனர் என்பதும், கோவலன் உணவுகொள்ளுங்கால் ஆங்குவந்த அவ்விருவரும் அது கண்டு விம் மிதமெய்திப் பேசிச் சென்றனர் என்பதும், ஏறத்தாழக் கோவலன் கண்ணகியைப் பிரிந்துசெல்லுங்காலையே அவர்களும் குரவையாடத் தொடங்கினர் என்பதும், பின் கண்ணகியும் அக்கூத்தைக் கண் டாள் என்பதும், அப்பொழுதே அவள் மனம் இனமறியாக் கலக்க முற்றுக் கொண்டிருந்தது என்பதும் ஒருபுறம் குரவை உச்சக்கட்டத் தில் நடைபெற்றுக்கொண்டிருந்த ஈற்றயல் நிலையிலேயே பிறிதொரு புறம் கோவலன் வாளேறுண்டான் என்பதும் குரவை முடிவிலேயே அச் செய்திகண்ணகிக்குக் கிட்டிய தென்பதும் பிறவுமே எம்முடைய கருத்தாம். மேலை நிகழ்ச்சித் தொகுப்பிலும் இதனை இயைபுறக் காட்டி யிருக்கின்றோம்.

ஆடுதும் யாம்

கோவலன் பிரியுங்காலை அவர்களில்லாத வேறு இடத்தில் குரவை நடந்திருக்கும் என்ற (பிறர்) கருத்தை மறுத்துரைக்கும் ம. பொ. சி.

"மண்ணின் மாதர்க்கு அணியாகிய
கண்ணகியுந் தான் காண'

குரவைக் கூத்து நிகழ்ந்ததாக ஆசிரியர் கூறுவதும் எம் கருத்தை வலியுறுத்துகின்றது'' என்று குறிப்பிடுகின்றார்.

இவ்வாறு ஆசிரியர் யாண்டும் கூறிற்றிலர். தீக்குறி கண்ட மாதிரி தன் மகளை நோக்கி, "கண்ணகியுந் தான் காண........ — குரவையாடுதும் யாம்'' என்று (எதிர்காலத்தில்) குறித்தன்றி வேறில்லை.

"கண்ணகியுத் தான் காண'' என்ற வரையில் ஆசிரியர் கூற்றை அப்படியே எடுத்துக்கொண்ட சிவஞானம் அவர்கள் "ஆடுது யாம்'' என்னும் மொழியை மறைத்து "நிகழ்ந்ததாக (இறந்த காலத்தில்)

www.thamizham.net - Free E book No 7519

ஆசிரியர் கூறுவதும்'' என்று தம் நடையாய்த் திரித்துக் கருத்தை வலியுறுத்த முற்படுகின்றார்!

மேற்கூறிய மாதரியின் கூற்றைத் தாங்கிநிற்கும் 'கருப்பம்' அவள் தீக்குறி கண்ட அளவானே தன்மகளை நோக்கிக் கூறிய தொன்றேயாம் என்பதையும், கருப்பம் முடிந்து இடைநேரங்கழிந்தே ஆய்ச்சியர் கூடினர் என்பதையும் பின்னரே குரவை ஆடினர் என் பதையும் உணர்ந்துகொள்க!

மாதரி கருப்பத்திற்கூறியது எதிர்காலத்ததே யாயினும் அவ் வாறே கண்ணகியுங் காணக் குரவை நடந்ததாகக் கொள்ளுதல் பிழையாமோ வெனின், பிழையன்று; ஆயின் ஆட்டத்தின் தொடக் கத்தை ஒட்டிய சிறிது நேரத்தில் கோவலன் கண்ணகியைப் பிரிந் திலன் —பிரிந்திருத்தல் இயலாது என்றல் பொருந்தா தென்பதே எமது கருத்தாம்.

'குரவைக்கூத்து நிகழ்ந்ததோ விடியற்காலை நேரத்தில் என் பதனை.

'மாலை வெண்குடை மன்னவன் கோவிலில்
காலை முரசங் கனைகுரல் இயம்பும் ஆகலின்
நெய்ம்முறை நமக்கின்றாம் என்று
ஐயைதன் மகளைக் கூஉய்க்
கடைகயிறும் மத்துங் கொண்டு
இடை முதுமகள் வந்து தோன்றுமன்'

என்ற வரிகளும், அதனை அடுத்து 'உரைப்பாட்டு மடை'' 'கருப்பம்' என்ற தலைப்புகளில் வரும் வரிகளும் குரவைக் கூத்து நிகழ்ந்தநேரம் பொழுது விடிந்த தருணம் என்பதனைப் புலப்படுத்தும்' என்கின்றார் ம. பொ. சி.

மேற்காட்டிய பாடலடிகள் சிறுகாலைப் பொழுதில் மாதரி தயிர் கடையச் சென்றாள் என்பதையும், 'உரைப்பாட்டுமடை' மாதரி தீக் குறிகண்ட அளவானே(தீமை)வருவதொன்று உண்டு' எனக் கருதி னாள் என்பதையும், 'கருப்பம்' அவள் தன் மகளை நோக்கிக் கறவை கன்று துயர்நீங்கக் குரவை யாடுதும் யாம் என்று கருத் துரைத்தாள் என்பதையும் புலப்படுத்துவதன்றி, அவர் கூறுமாறு போல் குரவைக் கூத்து நிகழ்ந்த நேரம் விடியற் காலத்தே'பொழுது விடிந்த தருணம்' என்பதைப் புலப்படுத்துமாறு யாங்ஙனம்?

ம. பொ. சி. தமதுரையில்'என்பதை' என்பதை' என்று ஈரிடத் துக் குளறுதலும், 'வரிகளும்' என்று பன்மையால் முடித்ததனையே அதனை என்று ஒருமையாற் கூட்டுதலுமே இவர்தம் குழப்படியான நிலையை வெளிப்படுத்துகின்றன வல்லவா!

(தொடரும்)

www.thamizham.net - Free E book No 7519

தமிழின முன்னேற்றத்தில் மொழியின் இன்றியாமையாமை.

பேரா. மு. ச. சிவம் க.மு.

(8-11-81-இல் நடைபெற்ற தமிழினக் காப்பு மாநாட்டில், ஈரோடு வாசவிக்கல்லூரித் தமிழ்ப்பேராசிரியர் மு.ச.சிவம் அவர்கள் ஆற்றிய உரை.

"உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின் வாக்கினிலே ஒளி உண்டாகும்" என்று பாரதியார் பாடியது போலத் தமிழினம் வாழ்வதற்காகவே வாழ்நாள் முழுதும் உண்மையாகவே உழைத்து வரும் பாவலரேறு ஐயா அவர்களே, தேவர்கள் சாகாமலிருக்க அமிழ்தம் இருப்பது போலவே ஈழத்துத் தமிழர்கள் சிங்கள வெறியர்களால் கொல்லப்பட்டுச் சாகாமலிருக்குமாறு ஈழத் தமிழினத்தைக் காத்து வரும் தலைவர் உயர்திரு **அமிர்தலிங்கம்** அவர்களே,'மங்கையர்க்கரசி எங்கள் குல தெய்வம்'என்று ஈழத்துத் தமிழ்ப் பெண்களால் கொண்டாடப் பெற்றுவரும் திருவாட்டி **மங்கையர்க்கரசி** அவர்களே, பெரியோர்களே, தாய்மார்களே எல்லோருக்கும் என் வணக்கங்கள்.

உலகில் இப்போது ஏறத்தாழ மூவாயிரம் மொழிகள் பேசப்படுவதாக மொழிநூலறிஞர்கள் கூறுகின்றனர். இவற்றுள் உயர் தனிச் செம்மொழிகள் என்று கூறத்தக்க மொழிகள் ஒரு சிலவே. அவற்றுள் பழமையும் தலைமையும் வாய்ந்த மொழி நம் தாய்த்தமிழே. பழங்காலத்தில் தோன்றிய எத்தனையோ மொழிகள் பின்னர் மறைந்து விட்டன. ஆனால் இன்னும் புதுமைப் பொலிவுடன் விளங்கி வரும் நம் தமிழ்மொழி எப்பொழுது தோன்றியது என்பதை மொழி நூலறிஞர்கள்கூடக் கூறமுடியவில்லை.

"தொன்று மொழிந்த தனைத்தும் உணர்ந்திடும்
சூழ்கலை வாணர்களும் இவள்
என்று பிறந்தவள் என்றுணராத
இயல்பினளாம் எங்கள் தாய்"

என்று பாரதியாரும் தமிழின் தொல் பழமையைப் பற்றிப் பாடி இருக்கிறார்.

கி.மு. 3-ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 15-ஆம் நூற்றாண்டு வரை ஐரோப்பாவில் வல்லாண்மை செலுத்தி வந்த இலத்தீன் மொழி இப்போது வடமொழியைப் போலவே வழக்கிழந்த மொழி ஆகிவிட்டது. அம் மொழி வழக்கிழந்ததால் இலத்தீன் பேசிவந்த மக்களினம் சாய்கால் இழந்துவிட்டது. இவ்வுண்மையை எட்வர்டு கிப்பன் என்பார் எழுதிய 'உரோமப் பேரரசின் வீழ்ச்சியும் சரிவும்' (The fall and Decline of the Roman Empire) என்ற நூலில் தெளிவாக உணரலாம்.

பண்டு கிரேக்கப் பண்பாட்டின் நிலைக்களனாக இருந்த பண்டைய

www.thamizham.net - Free E book No 7519

கிரேக்க மொழி வழக்கிழந்து போனதால் கிரேக்க இனம் இன்று சீர் குலைவை எய்தியுள்ளது.

மொழி சிதைவுற்றால் அம் மொழி பேசும் இனம் சிதைவுறும், பெருமையை இழக்கும் என்பதற்கு இன்னும் எத்தனையோ எடுத்துக் காட்டுகளைக் கூறலாம். ஆனால் எடுத்துக் கொண்ட தலைப்பு ''தமிழின முன்னேற்றத்தில் மொழியின் இன்றியமையாமை'' என்றிருப்பதால் தமிழின வளர்ச்சிக்குத் தமிழ்மொழியே முதன்மை யாக இருக்கிறது என்பதை எடுத்துக் காட்டுகள் மூலம் விளக்க முற் படுகின்றேன்.

கி. பி. 11-ஆம் நூற்றாண்டிலிருந்து 15-ஆம் நூற்றாண்டுவரை ஆங்கிலேயர்கள் தம் நாட்டில் பிரெஞ்சு மொழியையே அறமன்ற, பண்பாட்டு மொழியாக போற்றி வந்தனர். இக்காலத்தில் சிலர் தமிழ் எவ்வாறு அறமன்ற மொழியாக இருக்க முடியும், பல்கலைக் கழகப்பாட மொழியாக இருக்க முடியும் என்று கேட்பது போலவே 14-ஆம்நூற்றாண்டில் ஆங்கிலேயர்களே ஆங்கிலம் எப்படி அறமன்ற மொழியாக இருக்க முடியும் என்று கேட்டனர். எனினும், தாய்மொழிப் பற்று மிகுந்த ஆங்கில அறிஞர்கள் ஒருசிலர், எல்லாத் துறைகளிலும் ஆங்கிலத்தையே பயன்படுத்த வேண்டும் என்று விடாப்பிடியாக முயற்சி செய்தனர். அதன் பயனாகவே பிற்காலத்தில் ஆங்கிலம் எல்லாத் துறைகளுக்குமுரிய மொழியாயிற்று, ஆங்கிலமொழி வளர்ந்ததனால்தான் ''கதிரவன் மறையாத பேரரசினை'' ஆங்கிலேயர் கள் நிறுவமுடிந்தது. ஆங்கில மொழி வளராதிருந்தால் ஆங்கிலேயர் கள் உலக அரங்கில் இத்துணைப் பெருஞ்சிறப்பைப் பெற்றிருக்க முடி யாது, இதுபோலவே சில நூற்றாண்டுகளுக்கு முன்புவரை உருசிய மொழி மிக எளிய மொழியாகவே இருந்தது. ஆனால் உருசிய மக்களின் முழுமுயற்சியால், அஃது இன்று உலக மொழிகளுள் ஒன்றாகத் திகழ் கிறது. முந்நூறாண்டுகட்கு முன்பு எளிய மொழியாக இருந்த உருசிய மொழியை உலகமொழிகளுள் ஒன்றாக்க முடிந்தது என்றால், பல ஆயிரமாண்டுகளாகப் பண்பட்ட நம் தமிழ் மொழியைத் தமிழர்கள் முயன்றால் ஏன் உலகப் பெருமொழியாக வளர்க்க முடியாது? தமிழ் உலகப் பெருமொழியாக வளர்ந்தால்தான் தமிழருக்கு உலக அரங்கில் தனியிடங் கிடைக்கும். செத்த வடமொழியைக் காட்டிலும் பழமை வாய்ந்த தமிழைப் பழம்பெரு மொழி (Classical language) என்று இந்திய அரசு கூட இன்னும் உணர்ந்து போற்றவில்லை! சொந்த நாட்டிலேயே தமிழுக்குரிய சிறப்புநிலை கிடைக்கவில்லை. இதனை உரிமையாகப் பெறுவதற்கு நம் '**உலகத் தமிழின முன்னேற்றக் கழகம்**' கட்டாயம் முயலும்.

வடமொழியின் வளர்ச்சிக்குக் கோடி கோடியாக நடுவண் அரசு கொட்டிக் கொடுக்கிறது. ஆனால் பழந்தமிழ் வளர்ச்சிக்கு வேண்டிய அளவு உதவி செய்யவில்லை.

www.thamizham.net - Free E book No 7519

மொழியில்லாவிடில் இனம் அழியும் என்பதற்கு வருந்தத் தக்க ஓர் எடுத்துக்காட்டுக் கூற விரும்புகின்றேன். மொழிவழி மாநிலம் பிரிக்கப்படுவதற்கு முன்பு பெரியார் மாவட்டம் சத்தியமங்கலத்தி லிருந்து கொள்ளேகாலம்,மைசூர் வரை தமிழர்களே பரவியிருந்தனர். ஆனால் பிறகாலத்தில் சத்தியமங்கலத்திலிருந்து மைசூர் வரையுள்ள பகுதி கா நாடகத்தில் சேர்க்கப் பெற்று விட்டதால், இப்போது அங் குள்ள தமிழர்கள் அனைவரும் கன்னடியர்களாக மாறிவிட்டனர். தமிழ் படிப்பதற்கு வாய்ப்பின்மையாலும், கன்னடம்படித்தவர்கட்கே வேலைவாய்ப்புக் கிடைப்பதாலும் அங்குள்ள தமிழர்கள் எல்லாரும் கன்னடமே பயின்று வருகின்றனர். இவ்வாறு தமிழினத்தின் ஒரு பகுதியினர் கன்னட இனமாயினர். இவ்வாறே தென்னப்பிரிக்கா, மொரீசியசுத் தீவு, இந்தோனேசியா முதலிய இடங்களில் குடியேறிய தமிழர்கள் தமிழை மறந்துவிடும் சூழ்நிலை ஏற்பட்டு விட்டது. இவ் விடங்களில் உள்ள தமிழின மக்களுக்கு மீண்டும் புத்துயிர் கொடுக்க **'உலகத் தமிழின முன்னேற்றக் கழகம்'** பாடுபட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்: இதுபோலவே ஈழத்திலும் தமிழினம் காக்கப் பட வேண்டுமானால் தமிழுக்குப் பாதுகாப்புத்தரும் விடுதலை இயக்கம் கட்டாயம் ஈழத்தில் இயங்க வேண்டும்

இறுதியாகத், தமிழின் முன்னேற்றத்திற்குத் தமிழின வளர்ச்சி மிக இன்றியமையாதது என்பதனை வலியுறுத்திப் பாவலரேறு ஐயா அவர்கள் பாடிய சில பாடல்களைக் 'கனிச்சாறு' முதல் தொகுதி யிலிருந்து எடுத்துக்கூற விழைகின்றேன்,

"தமிழ்ப்படி யேறின் தமிழினம் ஏறும்!
தாழ்நிலை இழிவுகள் மாறும்! —நம்
தலைவிலை எனின் தரல் வேண்டும்! (பக். 11)

'தமிழ்மொழி வாழ்க! தமிழ் மொழி வாழ்க.'
தமிழ்மொழி வாழ்க! என்றுரைப்போம் —அதால்
தமிழ்நிலம் தழைக்க என்றுழைப்போம்!
தமிழின்றித் தமிழின மும் இல்லையன்றோ
தமிழ்பற்றிக் கவலாதார் எண்ணிப் பார்க்க! (பக் 13)

'தாழ்ச்சியுறுந் தமிழினத்தின் மேன்மையெலாம்
தமிழ்மொழியின் மேன்மை ஒன்றே' (பக் 18)

'மொழிநலமே இனநலமாம்' முழு மாந்தப்
பெருநலத்தின் பகுதிக் கூறும்'
மொழிநலத்தைச் சிதைத்திடுவோர் இனஞ்சிதைப்போர்
இனநலத்தின் முளையைச் சீய்ப்போர்!
மொழி நலத்தைக் காவாமல் இனமிழந்த
முழுநலன்கள் கோடி கோடி!
மொழி நலமே கருத்து நலம்; கருத்திலையேல்
வினையில்லை; விளைவுமில்லை' (பக் 38)

www.thamizham.net - Free E book No 7519

பெரியாரும் தமிழும்

(கடந்த 17.9.81-ஆம் நாள் இரவு 8-15 மணிக்கு, சென்னைத் தொலைக்காட்சியில் வண்ணக் களஞ்சியம் நிகழ்ச்சியில் **பாவலரேறு பெருஞ்சித்திரனார்** பேசியது.)

மக்களினத்திற்கு தன்மானவுணர்வூட்டிய தந்தை பெரியாரின் 103-ஆவது பிறந்த நாள் இது.

தந்தை பெரியார் ஒரு முழுப் பகுத்தறிவாளர்; குமுகாயச் சீர் திருத்தக்காரர்; பழமை உணர்வுகளையும் கொள்கைகளையும் அறிவியல் கண்ணோட்டத்தோடு ஆராய்ந்து, அவற்றைத் தவறு, சரி என்று தேர்ந்து, நன்மை தீமைகளை மக்களுக்கு எடுத்துச் சொல்லும் மக்கள் அறிவியலாளர்; புதுமை விரும்பி.

எனவே, தமிழ் மொழியையும் அவர் அறிவியல் கண்ணோட்டத்துடன்தான் அணுகினார். அது ஒரு பழமையான மொழி என்பதற்காகவோ, சிறந்த இலக்கண இலக்கியச் செழுமை வாய்ந்தது என்பதற்காகவோ, அவர் அதைப் பாராட்டவில்லை.

அதில் உள்ள பாட்டு இலக்கியங்களையும், கதை இலக்கியங்களையும், வேறு சில கூறுகளையும், மக்கள் மன நலன் அறிவுநலன் இவற்றுக்குப் பயன் தரும் வகையில் ஆராய்ந்தார். அவற்றிலுள்ள மூட நம்பிக்கைகளையும் மக்களுக்குதவாத பழமைக் கருத்துகளையும் அவர் ஏற்றுக்கொள்ள மறுத்தார்; அவற்றைக் கடுமையாகச் சாடினார். பொதுவாக மக்கள் வாழ்க்கைக்குப் பயன்தராத எந்த மொழிக் கூறையும் அவர் ஒப்புக் கொள்ளவில்லை. மேலும், தமிழ்மொழி புலவர்கள் பாங்கிலேயே அடைபட்டுக் கிடந்து, பொது மக்கள் நிலைக்கு எளிமையாகப் பயன்படுத்த முடியாமல் இருப்பதை அவர் எண்ணி வருந்தினார். அதை அறிவியல் சிந்தனையுடன் முன்னேறுவதற்கு வாய்ப்பில்லாமல் சிறைப்படுத்தி வைத்திருந்த பழமை விரும்பும்புலவர்களைக் கண்டித்தார். அவர்களுக்கு உணர்வில் உறைக்கும்படியாகத் தமிழ் மொழியை 'ஒரு காட்டு மிராண்டி மொழி' என்றும் கூறினார்.

(முன் பக்கத் தொடர்ச்சி)

'அன்னைமொழி வீழ்ச்சி அவ்வினத்தின் வீழ்ச்சி—இதை
முன்னை வரலாறு மெய்ப்பிக்கும், முத்தமிழீர்! (பக் 117)

'எதனைக் காவா விடினும் தமிழர்
எந்தமிழ் மொழியையும் மரபையும் காக்க.'
அதுதான் தமிழினம் அழியாது காக்கும்!
அதுதான் தமிழகம் இழியாது தேக்கும்!
அவரவர் மொழிதான் அவரவர் இனத்தை
அழியாமற் காக்கும் ஆணிவேர் ஆகும். (பக் 145)

www.thamizham.net - Free E book No 7519

பெரியார் தமிழ் மொழியைப் பற்றிக் கருத்துக் கூறும் பொழு-தெல்லாம், அவர் அதைப் பற்றி ஏதும் தெரியாத வகையில் கருத்துக் கூறிவிடவில்லை. தமிழ்மொழியின் மிகப்பழைய இலக்கண நூலாகிய தொல்காப்பியம் முதல் திருக்குறள், கம்பராமாயணம், வில்லிபாரதம், திருவிளையாடல் புராணம், பெரியபுராணம், கந்தபுராணம், புற-நானூறு, நாலடியார் முதலிய பாட்டு, கதை இலக்கியங்கள், அறநெறி நூல்கள் வரை அவர் ஓரளவு கற்றிருந்தார். திருக்குறளையும் கம்ப ராமாயணத்தையும் அவர் நன்கு ஆராய்ச்சி முறையில் அறிந்திருந்-தார். கம்பராமாயணத்தை வடமொழி வால்மீகி இராமாயணம், துளசி தாசு இராமாயணம், பௌத்த இராமாயணம் முதலியவற்றுடன் ஒப்பிட்டு, ஆராய்ந்து படித்துப் பல ஆராய்ச்சிக் கட்டுரைகளையே பெரியார் எழுதியிருக்கிறார்.

பெரியார் நல்ல தமிழ்ப்பற்றுக் கொண்டவர். அவர் வரலாற்றை எழுதிய சாமி சிதம்பரனார் 'தமிழர் தலைவர்' என்னும் தம் நூலில் தந்தை பெரியாரின் தமிழ்ப் பற்றைப் பற்றிக் குறிப்பிடுகையில், "பெரியாரின் வீட்டு மொழி கன்னடமாயினும், தமிழையே தாய் மொழியாகக் கொண்டிருப்பவர். அளவு கடந்த தமிழ்ப் பற்றுள்ளவர். தமிழ்மொழியைப் பேணவேண்டுமென்பதில் அவருக்கிணை எவரு-மிலர்" — என்று எழுதுகிறார்.

தமிழ்மொழியேதான் திரவிட மொழிகளாக வழங்குகின்றது என்னும் கொள்கையுடையவர், பெரியார். அதைப் பற்றிக் கூறும் பொழுது, அவர்,

"என் சிற்றறிவிற்கு, என் பட்டறிவிற்கு, ஆராய்ச்சிக்கு எட்டிய வரையில், தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய நான்கும் தனித்தனி மொழிகளென்றோ, அல்லது தமிழ் தவிர மற்ற மூன்றும் தமிழிலிருந்து பிரிந்த மொழிகளென்றோ, தோன்றவில்லை. ஒரே மொழி-அதாவது தமிழ்தான் நாலுஇடங்களிலும் நாலுவகையாகப் பேசப்பட்டு வருகிறது என்றே நான் கருதுகிறேன்"—என்று கருத்தறிவிக்கிறார்.

தமக்குள்ள தமிழ்ப்பற்றைப் பற்றி அவரே, 1939- ஆம் ஆண்டில் கோவை மாணவர் மன்றத்தில் பேசிய சொற்பொழிவில் கீழ்வருமாறு விளக்கியிருக்கிறார்.

"தாய்மொழி என்பதற்காகவோ, நாட்டுமொழி என்பதற்காகவோ எனக்குத் தமிழ் மொழியிடம் எவ்வகைப் பற்றும் இல்லை. அல்லது தனிமொழி என்பதற்காகவோ, மிகப் பழைய மொழி என்பதற் காகவோ எனக்கு அதில் பற்றில்லை. பொருளுக்காக என்று எனக்கு ஒன்றினிடத்திலும் பற்றுக் கிடையாது. அது மூடப்பற்று. குணத்-தினாலும், அக் குணத்தினால் ஏற்படும் நற் பயனுக்காகவுந்தான் நான் எதனிடத்திலும் பற்று வைக்கின்றேன்.

... என் தமிழ்ப் பற்றும் அது போல்தான். தமிழினிடத்தில் நான் அன்பு வைத்திருக்கின்றேன் என்றால், அதன் மூலம் நான்

www.thamizham.net - Free E book No 7519

எதிர் பார்க்கும் நன்மையும், அது மறைய நேர்ந்தால் அதனால் இழப் பேற்படும் அளவையும் எண்ணி மதிப்பிட்டே நான் தமிழ் மொழியிடம் அன்பு செலுத்துகிறேன்.

. . . தமிழ், இந்நாட்டு மக்களுக்கு எல்லாத் துறைக்கும் முன்-னேற்றமளிக்கக் கூடியதும், உரிமையளிக்கக் கூடியதும், மானத் துடனும், பகுத்தறிவுடனும் வாழத்தக்க வாழ்க்கையளிக்கக் கூடியதும் ஆகும் என்பது, எனது கருத்து. ஆனால் அப்படிப்பட்டவை யெல்லாம் தமிழிலேயே இருக்கின்றதா என்று சிலர் கேட்கலாம். எல்லாம் இல்லை என்றாலும் மற்ற பல இந்திய மொழிகளை விட அதிக மான முன்னேற்றத்தைத் தமிழ்மக்களுக்கு அளிக்கக் கூடிய கலைகள், பழக்க வழக்கங்கள், அதற்கேற்ற சொற்கள் தமிழில் இருக்கின்றன. என அறிகிறேன். ஆதலால், தமிழுக்குக்கேடு உண்டாகும் என ஐயு றத்தக்க வேறு எந்த மொழியும் விரும்பத் தகாததேயாகும்.

தந்தை பெரியார் அவர்கள் சிறந்த பகுத்தறிவுச் சிந்தனையாளர் ஆகையால், எந்தக் கருத்தையும் ஆராயாது, அவர்க்குச் சரி என்று பட்டாலல்லது, வெளிப்படையாகக் கூற மாட்டார். தமிழ் நாட்டில் பிறந்தவர்களுக்கு — தமிழர்களுக்குத் தாய் மொழியாகிய தமிழ் மொழி யிடத்தில் பற்று வேண்டும் என்று தந்தை பெரியார் மனவியல் முறைப்படி அறிவுறுத்தியிருக்கிறார். 1924 திசம்பரில் திருவண்ணா மலையில் நடந்த பேராயக் கட்சி (அதாவது காங்கிரசுக் கட்சி) மாநாட்டில் அவர் பின்வருமாறு பேசினார்.

"ஒரு நாட்டில் பிறந்த மக்களுக்கு வேண்டப்படும் பற்றுகளுக்குள் தலையாய பற்று மொழிப்பற்றேயாகும். மொழிப் பற்று இராதவரி டத்து நாட்டுப்பற்று இராதென்பது உறுதி. நாடு என்பது மொழியை அடிப்படையாகக் கொண்டியங்குவது. தமிழ் நாட்டில் பிறந்தவர் களுக்கு — தமிழர்களுக்குத் தமிழ்மொழிப் பற்று கட்டாயம் தேவை, தேவை என்று சொல்கிறேன்.

வங்காளிக்கு வங்க மொழியில் பற்றுண்டு; மகாராட்டிரனுக்கு மகாராட்டிர மொழியில் பற்றுண்டு; ஆந்திரனுக்கு ஆந்திர மொழியில் பற்றுண்டு. ஆனால் தமிழனுக்குத் தமிழ் மொழி யில் பற்றில்லை. இது பொய்யோ? தமிழ் நாட்டில் தமிழ்ப் புலமை மிகுந்தவர்கள் எத்தனைப்பேர் ஆங்கிலப் புலமையுடைய தமிழர்கள் எத்தனைப் பேர் என்று கணக்கெடுத்தால் உண்மை விளங்கிப் போகும். தாய்மொழியில் பற்றுச் செலுத்தாதிருக்கும் வரை தமிழர்கள் முன்னேற்றமடைய மாட்டார்கள்"

— தந்தை பெரியாருடைய இந்தக் கருத்து எவ்வளவு ஆழமானது. அறிவு சான்றது என்று தமிழரனைவரும் எண்ணிப்பார்க்க வேண்டும்.

பெரியார் தமிழ்மொழியை மிக மிக எளிமையாகவும் இனிமை யாகவும் பொதுமக்களிடம் கையாண்டார். அவர் நினைத்த கருத்தைப்

www.thamizham.net - Free E book No 7519

பேசுவதற்கென்று அவர் கையாண்ட சொற்கள் படிக்காத மக்களுக்கும் நன்கு புரியக் கூடியவை, அவர் தமிழ் மொழியை மிக இயல்பான முறையில் இன்னும் சொன்னால் கொச்சையாகக்கூடக் கையாள்வார். ஆனால் அதில் இனிமை இருக்கும்; சுவையிருக்கும்; கேட்போரை ஈர்க்கக் கூடிய கவர்ச்சியிருக்கும்.

தமிழ்மொழியை இவ்வாறு இயல்பாகவும் கொச்சையாகவும் கலப்பாகவும் பெரியார் பேசினாலும் அல்லது எழுதினாலும், தமிழ்மொழி தூய்மையாகக் கலப்பில்லாமல் பேசப் பட வேண்டும் — என்பதில் அவருக்கு அக்கறையிருந்தது; ஆர்வம் இருந்தது. தமிழ் மொழியைக் கலப்பில்லாமல் தூய்மையாக எழுத வேண்டும் — பேச வேண்டும் என்பதில் பெரியார் வலிமையான கருத்துக் கொண்டிருந்தார்.

1926-ஆம் ஆண்டு 'குடியரசு' இதழிலும், 1937-ஆம் ஆண்டு 'பகுத்தறிவு' இதழிலும் அவர் இப்படி எழுதினார்.

''தமிழ்ப் புத்தகங்கள் தூயதமிழில் எழுதப்பட வேண்டும்.

சமசுகிருதச் சொற்கள் தமிழில் கலந்தால் தமிழுக்குப் பெருமை குறைந்து போகாது என்றும், அப்படிக் கலப்பதுதான் மொழியின் முன்னேற்றம் என்றும் கூறி, ''பழையன கழிதலும், புதியன புகுதலும் வழுவல கால வகையினானே'' என்று அமைவு சொல்லுவதோடு, இதிலுமா சாதி வேற்றுமை! — என்கிறார்கள்.

அப்படியானால் 'தண்ணீர் கொண்டு வா' என்பதற்குப் (பகரமாக) பதிலாக, நம்மால் சரியாகப் பலுக்கவும் (அதாவது உச்சரிக்கவும்), எழுதவும், பழக்கமும் வாய்ப்பும் இல்லாத சமசுக்கிருதச் சொல்லாகிய 'ஜலம் கொண்டு வா' என்று சொல்வது குற்றமில்லையானால், 'வாட்டர் கொண்டு வா, என்று ஆங்கிலச் சொல் சொல்லுவதில் தப்பென்ன? அப்புறம் தனித்தமிழ் என்ற சொல்லுக்கும், மொழிப் பற்று என்கிற சொல்லுக்கும் பொருள்தான் என்ன? இம்மாதிரி மொழிப் பற்றிலிருந்தே இவர்களது நாட்டுப் பற்றின் தகுதியையும் அறிந்து கொள்ளலாம். பழையன கழிந்து, புதியனபுகுவதாயிருந்தால் நமக்கும் கவலையில்லை. புதியவை வந்து வலுக்கட்டாயத்தில் புகுந்து கொண்டு, பழையவற்றையும் கழுத்தைப் பிடித்துத் தள்ளுவதானால், அதைப் பொறுத்துக் கொண்டு, அதற்குச் சார்பாகப் பேசுவதென்பது மொழிக்கு இரண்டகமும், இன வஞ்சகமும் ஆவதோடல்லாமல், தமிழ்த்தாயின் கற்பைத் தமிழ்ப் பகைவர்களுக்குத் தந்நலத்திற்காக விற்றவர்கள் என்றுதான் சொல்ல வேண்டும்.''

— இத்தகைய கருத்துகள் எவ்வளவு துல்லியமானவை; துணிவுடையவை.

பெரியாரின் மொழித்துறை ஈடுபாட்டுக்கும் தமிழ்மொழி பற்றி அவர் கொண்ட தெளிவுக்கும் அவர் சிறந்த தமிழ்ப் பேரறிஞர்கள் பால் கொண்ட தொடர்புதான் காரணமாக விருந்தது.

www.thamizham.net - Free E book No 7519

மறைமலையடிகள், திரு. வி. க, சோமசுந்தர பாரதியார், கா. சுப்பிரமணியனார்,சாமிசிதம்பரனார் போன்ற பெருமக்கள் தொடர்பும் துணையும் பெரியாருக்கிருந்தது.

திருக்குறள் பொதுமக்களிடமும் அறிஞர்களிடமும் இன்று பரவலாக வழங்குவதற்கும் பெருமையுற்றதற்கும் ஒருவகையில் பெரியார்தாம் காரணம் என்று சொன்னால் அது மிகையாகாது. திருக்குறளுக்காக மாநாடுகளை நடத்திய முதல் பேரறிஞர் அவர். தமிழ் விழாவான பொங்கல் விழாவைப் பொது மக்கள் மிகச் சிறப்பாகக் கொண்டாடும்படி செய்தவரும் பெரியார்தாம்.

தமிழ்மொழிக்கு ஊறுநேரும்படி, பிற மொழி கட்டாயமாகப் படிக்கவேண்டும் என்பதைத் துணிவுடன் எதிர்த்தவரும் பெரியார்தாம்.

'வேறுமொழியைக் கல்விமொழியாக்குவதால், தமிழ் மொழியின் வளர்ச்சி குன்றும்; தமிழ் மக்களின் முன்னேற்றமும் தடைப்படும்' என்று 1926-இலேயே குடியரசு இதழில் கண்டனம் தெரிவித்தார், மொத்தத்தில், பெரியார் ஈடுபாடுகொண்ட அரசியல், பொருளியல், குமுகாயவியல் முதலிய துறைகளில் போலவே தமிழ்மொழித் துறையிலும் பலவகையான முன்னேற்றக் கருத்துகளைக் கூறியுள்ளார்.

இன்று அரசு கொண்டுவந்துள்ள தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்திற்கு, முதல் முதல் வழிவகுத்துக் கொடுத்தவரும், அதை நடைமுறைப் படுத்தியவரும் தந்தை பெரியார்தாம் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ?

தமிழினத்திற்காக மட்டுமல்லாமல் தமிழ் மொழிக்கும் தொண்டு செய்த பேரறிஞர் பெரியார். உலகிற்கே பயன்படுகின்ற வகையில் அரிய கருத்துகளை வெளிப்படுத்தியவரும், மக்கள் தொண்டாற்றிய வருமாகிய பெரியார்,தமிழ் மொழியில்தான் பேசினார். தமிழ் நாட்டில் தான் பிறந்து வாழ்ந்தார் என்பது நமக்கெல்லாம் பெருமையன்றோ! வாழ்க பெரியார். o

---

'தென்மொழி'

சென்னை-5.

	உள்நாடு	கொழும்பு	வெளிநாடு
ஆண்டுக் கட்டணம் :	15 உருபா	35 உருபா	35 உருபா
அரையாண்டுக் கட்டணம் :	8 ,,	18 ,,	18 ,,
தனியிதழ் :	1-25 ,,	3 ,,	3 ,,

ஒரிதழுக்கு உருபா 2.50 மேனி முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் எழுதிக் கேட்க.

www.thamizham.net - Free E book No 7519

உலகத் தமிழின முன்னேற்றக் கழகம்

(தலைமையகம்)

பொறுப்பு அமர்த்த அறிக்கை-1

உலகத் தமிழின முன்னேற்றக் கழகத்தின் பொறுப்பாளர்களாகக் கீழ்க்காணும் அன்பர்கள், கொடுக்கப் பெற்றுள்ள பதவிப் பொறுப்புகளில் 1-4-82 முதல்,கழகச்சட்ட நெறிமுறைகளுக்குட்படும் பதவியாண்டுக் காலத்திற்குப் பதவிப் பொறுப்புகளில், அமர்த்தப் பெற்றுள்ளனர். எஞ்சியுள்ள அயல் நாடுகள், மாநிலங்கள், மாவட்டங்கள், வட்டங்களுக்கான பதவிப் பொறுப்புகளும் அடுத்தடுத்து தலைமையக ஆய்வுகளுக்குப் பின்,விரைவில் நிறைவு செய்யப் பெறும்.

தலைமையகம், சென்னை-5
1—4—82

பெருஞ்சித்திரனார்,
கழக முதல்வர்.

௧ தலைமையகம்

1 முதன்மைக்குழு உறுப்பினர்கள்;

எழுவரில் கீழ்க்காணும் மூவர் இப்பொழுது அமர்த்தம் பெறுகின்றனர். எஞ்சிய நால்வர்அமர்த்தம் ஆய்வில் உள்ளது.

1 புலவர் இறைக்குருவனார், சென்னை.
2 தென்மொழி மறை நித்தலின்பனார், சென்னை.
3 தென்மொழி ந. முத்துக்குமரனார், அறி. இ., பல்லடம்.

2 தலைமைக் கழகச் செயலாளர்கள்.

1 அமைப்புச் செயலாளர்: தென்மொழி ப. துரையரசன்.
2 அயலகத் தொடர்புச் செயலர்:கோ. மு.பெருவழுதி.அறி.இ
(எஞ்சிய பதின்மர் அமர்த்தம் ஆய்விலுள்ளது) [(திரை. பட்)

௨ சென்னை மாநில மாணவரணி

அமைப்பாளர்: அ. ஆறிறைவன் அறி. மு.
செயலர் : மா. பொழிலன் க. இ.
பொருளர் : (ஆய்வில்)

௩ சென்னை மாநகர்

அமைப்பாளர்: (ஆய்வில்)
செயலர் : தென்மொழி சோ. ஆற்றலரசு க. இ.
பொருளர் : துரை. தென்னவன்

www.thamizham.net - Free E book No 7519

1 திருவல்லிக்கேணி வட்டம்.

தலைவர் : (ஆய்வில்)
செயலர் : அழ. இளமுருகன் அறி. இ. சென்னை.
பொருளர் : செ. கண்ணன். க. இ., (ச. இ.) சென்னை.

2 சைதை வட்டம்:

தலைவர் : சி. வள்ளல் ஒளியன், (பிரகாசம்) சைதை.
செயலர் : தென்மொழி ப. முருகவேள். ஆதம்பாக்கம்.
பொருளர் : கு. தண்ணிலவன் (சாக்கேத இராமன்) சைதை.

௪ வடஆர்க்காடு மாவட்டம்-வடக்கு (வேலூர்)

மாவட்ட அமைப்பாளர் : மா. செ. தமிழ்மணி-நெமலி
,, செயலர் : புலவர். குமர தன்னொளியன் க.மு. வேலூர்
,, பொருளர்: தென்மொழி கோ. நக்கீரன், அறி.இ. சோழலிங்கபுரம்.

1 அரக்கோணம் வட்டம்.

தலைவர் : புலவர். வ. திருவேங்கடம்,க. மு. கடம்பநல்லூர்.
செயலர் : மு. கதிரவன் க. மு. —நெமலி
பொருளர் : (ஆய்வில்)

2 குடியேற்றம் வட்டம்:

தலைவர் : இரா. வெற்றியழகன், க. மு,- குடியேற்றம்.
செயலர் : அ. அறிவுஒளி க. மு; கல். இ,- காட்டுப்பாடி.
பொருளர் : (ஆய்வில்)

3 திருப்பத்தூர் வட்டம்.

தலைவர் : புலவர். கோ. தேவராசன். அறி. இ., ச. இ. (வழக்கறிஞர்)திருப்பத்தூர்.
செயலர் : புலவர். ந. அ. அண்ணாமலை, ஆலங்காயம்
பொருளர் : (ஆய்வில்)

4 வேலூர் (வ. ஆ.) வட்டம்.

தலைவர் : அறிவுச்சுடர் க. மு., க இ.-செங்குட்டை
செயலர் : ச. ந. ச. மார்த்தாண்டன். அறி. இ. தோட்டப் பாளையம்
பொருளர் : (ஆய்வில்)

5 வாலாசா பேட்டை வட்டம்.

தலைவர் : ப. கோ. பாண்டுரங்கன், க. மு. சோழலிங்கபுரம்.
செயலர் : புலவர். நா. அரங்கநாதன், க.மு.வாலாசாபேட்டை
பொருளர் : (ஆய்வில்)

6 செய்யாறு வட்டம்.

தலைவர் : அ. தொன்மாலிறையன் (ஆதிகேசவன்), உக்கல்
செயலர் : மா. சீராளன், —மாத்தூர்.
பொருளர் : (ஆய்வில்)

www.thamizham.net - Free E book No 7519

7 வாணியம்பாடி வட்டம். (ஆய்வில்)
8 ஆர்க்காடு வட்டம்:
தலைவர், பொருளர் : (ஆய்வில்)
செயலர்: புலவர். கோ. திருவாணன், சக்கரமல்லூர்.

௫ வடஆர்க்காடு மாவட்டம் —தெற்கு (திருவண்ணாமலை)

மாவட்ட அமைப்பாளர்: சீனி. நிலவரசன் -திருவண்ணாமலை.
,, செயலர் : மு. உலக முதல்வன். க. இ. ,,
,, பொருளர் : பி. எழிலரசன் இலக். இ, ,,
மாவட்ட மகளிரணி அமைப்பாளர்:
நிலவழகி முகில்வண்ணன் அறி. இ., ஆ.ப. வேட்டவலம்
1 ஆரணி வட்டம். (ஆய்வில்)
2 செங்கம் வட்டம்
தலைவர் : (ஆய்வில்)
செயலர் : புலவர். மு. ஆறுமுகம் க. மு.ப.இ. சாத்தனூர்
பொருளர்: புலவர் இரா. பெருமாள் —சாத்தனூர் அணை.
3 போளூர் வட்டம்.
தலைவர் : அ. பழநியடிகள் —வில்வராணி.
செயலர் : வே. அரசவேலன் க. மு., கல்.இ—வாழியூர்.
பொருளர் : புலவர். துரை. திருமால்- இலக். இ.— போளூர்.
4 திருவண்ணாமலை:
தலைவர்: கு. முகில்வண்ணன். க. மு., கல். இ. வேட்டவலம்.
செயலர், பொருளர்: (ஆய்வில்)
5 வந்தவாசி: (ஆய்வில்)

௬ தகடூர் மாவட்டம்:

மாவட்ட அமைப்பாளர்: பெ. மணிவேலன்: க. மு., கல். இ.
,, செயலர் : புலவர் தே.வே. திருவழிப்பேறு(சந்தானம்)க.இ.
,, பொருளர்: புலவர் எ. வே. திருவரசன், க, மு., கல். இ.
,, மகளிரணி அமைப்பாளர். திருவாட்டி தமிழ்த்தென்றல்.
1 தகடூர் வட்டம்.
செயலர்: புலவர். கருமலை தமிழாழன் க. மு. தகடூர்.
2 கிருட்டிணகிரி வட்டம்.
செயலர்: கோ. அண்ணாத்துரை, க.மு. காவேரிப்பட்டணம்.
3 ஓசூர் வட்டம்.
தலைவர் : ஆ. தமிழ்மணி—ஓசூர்
4 ஊற்றங்கரை.
தலைவர் : புலவர் இரா.வேங்கடம், இல. இ. ஊற்றங்கரை.
செயலர்: இரா. வெற்றிநிலவன், க. மு. ஊற்றங்கரை.

www.thamizham.net - Free E book No 7519

5 பாலக்கோடு
தலைவர் : க. கோவிந்தன் க. இ., ஆ. ப. பாப்பாரப்பட்டி
செயலர்: மா. கிருட்டிணன் —அமானிமல்லாபுரம்,

(பிற வட்டத் தலைவர்கள், செயலாளர்கள், பொருளார்கள், அமர்த்தங்கள் ஆய்வில் உள.)

எ **பெரியார் மாவட்டம்**

மாவட்ட அமைப்பாளர் : பா் பொ. இளங்கோ, அ. மு. ஈரோடு.
செயலர், பொருளர். (ஆய்வில்)

1 தாராபுரம்.
தலைவர் : கு. பால்சாமுவேல் க. இ, ப. இ, — தாராபுரம்.
செயலர் : இல. வேலரங்கன் — கொளிஞ்சிவாடி.
பொருளர் : சோ. க. குமாரசாமி — மேட்டுவலசு,

2 கோபிசெட்டிபாளையம்.
தலைவர் : கு. ச. மகிழ்நன் (ஆனந்தன்) வணி.இ:ச.இ.—கோபி
செயலர் : கா. அரங்கச்செல்வன், க. மு. — கோபி.
பொருளர் : மா. அரசு — கோபிபாளையம்.

3 பெருந்துறை
செயலர் : புலவர். இரா. அருட்கையன் (கருணாகரன்) —சென்னிமலை.

4 பவானி.
தலைவர் : புலவர். பொதிகைச் செல்வன் க. மு. பவானி

5 ஈரோடு.
தலைவர் : புலவர். தி. மு. இராசமாணிக்கம். க. மு.—ஈரோடு
செயலர் : செ. கந்தசாமி (பொறி.இ.) வீரப்பன்சத்திரம்
பொருளர் : நிலா வேங்கடவன் பொறி. இ. ஈரோடு.

6 சத்தியமங்கலம்.
தலைவர் : புலவர். ப. கு. முருகவேள் க. மு. பு. புளியம்பட்டி
செயலர் : செம்பியன்வல்லத்தரசு. „
பொருளர் : ஆடலரசன். „

7 ஈரோடு நகரம்.
தலைவர் : அ. அழகிறைவன் (இராமலிங்கம்)—ஈரோடு
செயலர் : பாவலர். தமிழ்க்குமரன் „

8 உடுமலைப்பேட்டை.
செயலர் : ப. அறவாழி—போழறப்பட்டி
(பிற வட்டத் தலைவர்கள் செயலர்கள், பொருளர்கள் அமர்த்தங்கள் ஆய்வில் உள.)

www.thamizham.net - Free E book No 7519

அ கோவை மாவட்டம்:

மாவட்ட அமைப்பாளர்: கு. வெ. கி. ஆசான். க.மு.—கோவை
,, செயலர் : கி இளஞ்சேரல் முதுபாண்டியன்-மின்பாறை
,, பொருளர் : மா. ஆறுமுகம். — பல்லடம்.

1 அவநாசி

தலைவர் : நா. தமிழ்வேள் — பழங்கரை.
செயலர் : புலவர். சோ. ஆறுமுகவேலன், க.மு. கைகாட்டிப்புதூர்
பொருளர் : ப. கதிர்நிலவன் — அவநாசி.

2 கோவை நகரம்.

தலைவர் : தமிழ்மகன் —கோவை
செயலர் : துரைமடங்கன் —பூளைமேடு
பொருளர் : அரங்க தமிழ்மணி—கோவை

3 கோவை வட்டம்.

தலைவர் : ந. அருணன் —தடாகம்.
செயலர் : சுடர்வேந்தன் — கோவை.
பொருளர் : புலவர் ந இரா. தமிழ்வேள் — நரசிபுரம்

4 பல்லடம்.

தலைவர் : ந. இளங்கண்ணன், க. மு. குளத்துப்பாளையம்.
செயலர் : செ. திருமேனி, பல்லடம்
பொருளர் : சீனி. வாசுதேவன், அனுப்பப்பட்டி.

5 பொள்ளாச்சி

தலைவர் : கோ. ப. சீரங்கசாமி, பொறி. இ. ஆழியார்நகர்.
செயலர் : தென்னவன்கோ, மலையாண்டிப் பட்டணம்.
பொருளர் : (ஆய்வில்)

௯ திருச்சி மாவட்டம்:

மாவட்டஅமைப்பாளர்:இரா.பாலகங்காதரன்,பொறி.இ.-திருச்சி
,, செயலர் : நாரா. மகிழ்நன், கைலாசபுரம்.
,, பொருளர் : குழந்தை ஈகவரசன், திருவெறும்பூர்.
(பிற அமர்த்தங்கள் ஆய்வில்)

௧0 தஞ்சை மாவட்டம்

மாவட்ட அமைப்பாளர் : சு.அறிவுத்திருமணியார் (ஞானசிகாமணி), மன்னார்குடி.
,, செயலர் : த. தமிழ்த்தென்றல், கா. தெக்கூர்.
உரத்தநாடு செயலர் : ந. வை. இளஞ்செழியன், கருக்காடிப்பட்டி.
(பிற அமர்த்தங்கள் ஆய்வில்)

www.thamizham.net - Free E book No 7519

சுக புதுவை மாநிலம்.

மாநில அமைப்பாளர்: தமிழூர் ப. அருளி. வணி.இ,ச.இ-புதுவை

புதுவை மாவட்டம்.

தலைவர் : கோ. தாமரைக்கோ, புதுவை-10
செயலர் : சீனு. அரிமாப்பாண்டியன். புதுவை-9
(பிற அமர்த்தங்கள் ஆய்வில்)

சுஉ கருநாடக மாநிலம்:

மாநில அமைப்பாளர் : பொற்செழியன், வெங்காலூர்.
,, செயலர் : மு. சேரலாதன், தூரவாணிநகர்.
(பிற அமர்த்தங்கள் ஆய்வில்)

கழக முதல்வரின் பொறுப்பு அமர்த்தச் சுற்றுச் செலவு - 2

உலகத் தமிழின முன்னேற்றக் கழக முதல்வர் **பாவலரேறு பெருஞ்சித்திரனார்** அவர்கள்,கழக அமைப்புகளில் மாவட்ட வட்டப் பொறுப்பாளர்களை அமர்த்துதல் தொடர்பாகக் கீழ்க்காணும் விளக்கப் படி சுற்றுச்செலவு மேற்கொள்ள விருக்கிறார்கள். அவ்வம் மாவட்டங் களில் உள்ள தென்மொழி அன்பர்களும்,கழகத்தில் ஈடுபாடு கொள்ள விரும்பும் தமிழன்பர்களும், ஆர்வலர்களும் ஐயா அவர்களைக் குறிப் பிட்ட இடத்தில், குறிப்பிட்ட நாள், நேரங்களில் நேரில் வந்து பார்த்துக் கலந்துரையாடலிலும், பொறுப்பமர்த்தத் தேர்வுகளிலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

சென்னை-5 }
1—4—82 }

தென்மொழி ப. துரையரசன்.
கழக அமைப்புச் செயலாளர்.

மாவட்டம்,	தங்குமிடம். (வழிப்போக்கர் விடுதி) (Travaller's Bungalow)	நாள்	நேரம்
1. புதுக்கோட்டை	—புதுக்கோட்டை	19-4-82	காலை 9 முதல்
2. திருச்சி	—திருச்சி	20-4-82	மாலை 6 வரை
3. சேலம்	—சேலம்	21-4-82	,,
4. தென்னார்க்காடு	—விழுப்புரம்	22-4-82	,,
5. செங்கழுநீர்ப்பட்டு	—செங்கற்பட்டு	23-4-82	,,

(பிற மாவட்டங்கள் அமைப்பு பற்றி அடுத்த அறிவிப்பில் தெரிவிக்கப் பெறும்.)

www.thamizham.net - Free E book No 7519

(அட்டை 4-ஆம் பக்கத் தொடர்ச்சி)

0: 908: பெருமதிப்பிற்குரிய பாவலரேறு ஐயா அவர்கட்கு, வணக்கம். இன்று 'தமிழ்ச்சிட்டு' வந்தது. அதில் உள்ள 'செயற் பாட்டை' வலியுறுத்தும் மிக அருமையும் எளிமையும் வாய்ந்த பாடல் உள்ளத்தை மிகவும் ஈர்த்தது..... மேட்டூரில் தங்களைக் கண்டு உரையாடியதும், இனிமையும் அமைதியும் ஆழமும் வாய்ந்த பொழி-வைக் கேட்டதும் மகிழ்வையூட்டுகின்றன.

—ஞ. வெ. கி. ஆசான், கல்வியகம்,கோவை-2

0: 909 தனித்தமிழ் வடிவாம் பாவலர் பெரும! தங்களின் தமிழுக்கோர் படைப்பாம் முக்''கனிச்சாறு'' உண்டேன். அதனில் முத்தமிழின் சுவை கண்டேன். அது மட்டுமன்று; அன்னைத் தமிழ் மொழியே.''கனிச்சாறு'' வடிவொடு என்னின் இரத்த நாளங்களை உயிர்ப்படையச் செய்தது போன்ற உணர்ச்சியின் சிகரத்து என்னை உலாவரச் செய்தது.கனிச்சாற்றில் இடம்பெற்ற தமிழினத்தை தட்டி-யெழுப்புகின்ற பல பாடல் தொகுப்புகள் என் நெஞ்சைத் தொட்டன. தொட்டதோடு மட்டுமன்று. தொடவைத்தவரையே என் நெஞ்சம் காணத்துடித்தது. அந்த துடிப்பு இன்று நிறைவேறியதில் நான் பெருமகிழ்வடைகின்றேன். அந்த இறும்பூதின் சிகரத்து உள்ளத்தை ஒன்றுக்கித் தங்களின் தலைமையில் தமிழ்மொழிக்கு என்னால் இயன்ற தான உழைப்பினை என்றும் உரித்தாக்கி உறுதிமொழி எடுக்கின் றேன். ''தென்மொழி'' இதழ் தமிழகம் முழுதும் உலாவர வழிவகை செய்யுமாறு வேண்டியும் விடைபெறும்,

— இரா. ஆறுமுகம். பாண்டியன் குப்பம்,(தெ ஆ)

0: 910 ''தமிழ்ச்சிட்டு'' - பொறுப்பாசிரியர் திரு. பெருஞ்சித் திரனார் அவர்களுக்குத் தாழ்மையான வணக்கங்கள். மொழிஞாயிறு திரு. தேவநேயப் பாவாணர் அவர்களின் தலைசிறந்த மாணாக்கராயும் தனித்தமிழ் ஏந்தலாயும் விளங்குகின்ற தாங்கள், அவ்வுணர்ச்சி யாவர்க்கும் உண்டாதல் வேண்டுமென்னும் நல்லெண்ணத்துடன் 'தென்மொழி' 'தமிழ்ச்சிட்டு' என்னும் இரண்டு திங்களிதழ்களை நடாத்தி வருவதை அறிந்து நனிமகிழ்ச்சி அடைகின்றேன். 'தமிழ்ச்சிட்டு' சிறுவர்களுக்கென்று-குறிப்பாக மாணவர்கட்கென்று நடத்துகின்ற இதழாய் அமைந்துள்ள பாங்கு, உவகைக்குரியதே. இவ்விதழ் தன்னில் தனித்தமிழ் அறிவையும், மொழியுணர்ச்சியையும் ஊட்டவல்ல கட்டுரைகள் இருப்பதைக் கண்ணுற்று வியந்தேன். தமிழ்ச்சிட்டைச் சிறுவர்களுக்கிடையே, குறிப்பாகப் பள்ளிதனில் சென்று பயில்கின்ற மாணாக்கர்கட்கிடையே அறிமுகம் செய்வதென எண்ணியுள்ளேன்.

—பாவலர் கதிரவன். குடந்தை.

www.thamizham.net - Free E book No 7519

0; 902: ஐயா அவர்கட்கு வணக்கம்....... உலகத் தமிழின முன்னேற்றக் கழக வினைப்பாடுகள் யாவற்றிலும் கு.வெ.கி, ஆசான் அவர்களுடன் இணைந்து செயல்படக் கருதியுள்ளோம். இதுபோலும் அமைப்புகள் மூலம் பெரிதாக நாங்கள் ஒன்றும் செய்துவிடப் போவதில்லை என்பதை உணர்ந்துள்ளேன். இருப்பினும் ஏதேனும் செய்ய முயல, செய்பவர்கட்குத் துணைசெய்ய. இத்தகு அமைப்புகள் பயன் தரும் எனக்கருதுகிறேன்...... இதனுள்ளிருந்து என்ன செய்து விடுவோம் என்பதிலும் தெளிவில்லை. 'உலகத் தமிழினத்தின் ஒரு மித்தநலன்' என்பதும் அதன்பொருட்டு உழைப்பதென்பதும் எனக்கு விளக்கமற்றதாயுள்ளன. இயக்க வினைப்பாடுகளைக் கொண்டு இவற்றை விளங்கிக் கொள்ள முடியுமா எனப் பார்க்கிறேன். தமிழ்த் தேசவினத்தின் விடுதலையை இந்தியாவின் பிற தேசவினங்களின் விடுதலையுடன் இணைப்பது; தமிழ்த் தேசவின விடுதலைப் போராட்டத்தை மக்கள்போராட்டமாக மாற்றமுயல்வது; அதன் பொருட்டுத் தமிழக உழவர் போராட்டத்துடன் இன விடுதலைப் போராட்டத்தை இணைப்பது; தமிழகப் பின்னடைவுகளை மக்கள் மன்றத்திற்கு எடுத்துச் செல்வது; பெரும்பான்மை நடுத்தர மக்களையும், சிறுபான்மை ஏதுமற்ற மக்களையும் ஒரே அணிப்படுத்தும் வரந்தையைக் கண்டறிவது; அவர்தம் சிக்கலுடன் தேசவிடுதலைச் சிக்கலை இணைப்பது போன்றவை எவ்வாறு செயல்வடிவம் காணும் என்பது குழப்பமாயுள்ளது. நடுத்தர வகுப்புப் படிப்பாளிகளும், மாதச்சம்பளக்காரரும், பட்ட வேட்பர்களும், துவளா உடைத்தீரர்களும் இப்பணிகட்குத் தகுதியற்றவர்கள். இதில் நானும் தோழர்களும் அடக்கமே. வேலையில்லாத நேரங்களில், அறைகளிலும், தேநீர்க் கடைகளிலும் உட்கார்ந்து பேசுபேசென்று பேசி நேரத்தைக் கடத்துவதையும், சில துண்டறிக்கைகள் போடுவதையும், எப்போதாவது விழிபிதுங்கும் வரை முயன்று, கூட்டம் ஒன்று போட்டு முடிப்பதையும், அதிலும் போதிய பார்வையாளர் வாராது கலங்கிக் கொண்டிருப்பதையும் தவிர, எம்மால் செய்யத்தக்கதாக எதுவும் தெரியவில்லை. இவை, சிலவெளிப்படை உண்மைகள். எதிர்காலத்தில் ஏதும் வளர்ச்சியும் மாற்றமும் நிகழ்ந்தாலன்றி, ஒன்றும் இதுவரை தெளிவுபடவில்லை. தங்கள், — **இரணியன்,** கோவை-1

0. 903 பேரன்பிற்குரிய ஐயா அவர்கட்கு, வணக்கம். இதழ்கள் இன்று வந்து சேர்ந்தன. மாநாட்டு நிகழ்ச்சிகள் முடித்து மாநாட்டு மலர்வேலைகளை முடித்துத் தொடர்ந்து ஓய்வின்றிக் கழக அமைப்புகளை எல்லா ஊர்களிலும் அமைத்திடப் புறப்பட்ட செய்தியைத் தென்மொழியில் படித்தேன். பொதுநலம் என்ற பெயரால் தந்நலத்தினையே வளர்த்துக் கொள்கின்ற கீழோர்கள் நடுவிலே, கருமை மிகு மேகங்களிடை உலாவரும் செம்பரிதியாய் நந்தமிழர் வாழ்வினைக் காத்திட, நம்தமிழ் சிறப்புகளை உலகெங்கும் பரப்பிட இயக்கம் அமைத்துத் தமிழர் வாழ்வே தம் வாழ்வென வாழ்ந்து வருகின்ற தங்களின் சீரிய கொள்கைகளையும், தென்மொழி, தமிழ்ச்சிட்டையும் இங்கு என் நண்பர்கட்கும் ஆசிரியப் பெருந்தகையோர்க்கும் அறிமுகப்படுத்தினேன். அவர்கள் இதழ்களைப் படித்துத் தாங்கள், நாகரிக மோகத்தில் அருவருப்பில் வீழ்ந்து பக்கங்களை நிரப்பிப் பணம் பண்ணுகின்ற இந்தக்காலத்தில், தமிழின்றி வேறெதுவும் நோக்கின்றி இதழ் நடத்துவதை எண்ணி வியந்து கூறினர்கள். மற்றும் எனக்குத்தமிழ் பயிற்றுவித்த தமிழாசிரியர் திரு. வி. பரஞ்சோதி அவர்கள் நீண்டகாலத்திற்கு பின் தென்மொழியைக் காண்பதாகக் கூறி இதழினைப் படித்து விட்டு அளிக்கார். — [illegible]

www.thamizham.net - Free E book No 7519

0 904 மாண்புயர் ஐயா வணக்கம். எம் நெமிலி ஒன்றிய ஆசிரிய நடுவண்களின் கூட்டுக் கூட்டத்தில் கடந்த கும்பம் கூ- இல் தாங்கள் கலந்து உரையாற்றியமைக்குப் பெரிதும் நன்றியறிவித்துக் கொள்கின்றேன். உடல்நலன் இல்லாநிலையில், ஒலி பெருக்கி பழுதுற்ற போழ்தில் 3 மணி நேரம் தாங்கள் ஆற்றிய உரை உணர்வைத் தூண்டி அறிவைத் துலக்கி மனத்தைச் செழுமையாக்கியது. குறள்யாத்த அப்பெருமானின் உள்ளத்தே அமர்ந்து ஆற்றும் உரையாகத்தான் அஃது இருந்தது. சேய்மையில் இருந்து வந்தவர்கள் சிறிதும் சலித்துக் கொள்ளாமல் களிப்புடன் சென்றனர். தூய உணர்வலைகளை எம் வட்டாரத்தில் பரப்பிச் சென்றமைக்கு நன்றி, நன்றி.

— மா. செ. தமிழ்மணி. வேட்டாங்குளம்.

0: 905 அன்புகெழுமிய பாவலரேறு ஐயா அவர்களுக்கு, வணக்கம். தெள்ளு தமிழ் உள்ளளவும் தாங்களும் வாழ்ந்து இம் மன்பதை பயனுற தங்கட்கு நீடிய வாணாளும் கூடிய நலன்களும் தந்துதவ எல்லாம் வல்ல இறைப் பேராற்றலை வழுத்துகிறேன்.

தங்களன்புள்ள, — சி. அரசிறைவன், தஞ்சை-1

0: 906 பாவலரேறு ஐயா அவர்கட்கு வணக்கம். தென்மொழி சுவடி: 18 ஓலை: 7 ஆசிரியவுரை மிகவும் சிறப்பாக இருந்தது. பாக்கித்தான் அரசை அண்டியே வாழ்ந்து தனிநாடு பெற வேண்டும் என்று சேக்முசிபுர்இரகுமான் எண்ணியிருந்தால்,இற்றை நாளைய வங்கநாடு உருவாகி இருக்க முடியாது. ஆகவே இலங்கை வாழ் தமிழர்கள் தனி நாடு பெற வேண்டுமானால் உயிரைப் பணயம் வைத்துப் போராட வேண்டும். — வே. பால்ராசு கி. சே. இ. தூத்துக்குடி.

0: 907 பொன்விழாக் காணும் தென்மொழி ஐயா!
பன்னெடுங் காலம் வாழ்ந்திட வேண்டும்.
எம்மொழி இனத்தை எம்தமிழ் நிலத்தை
ஏற்றிடும் கதிராய் ஒளிதர வேண்டும்.

எண்ணமும் எழுத்தும் ஏற்றநற் செயலும்
வண்டமிழ் உயர்வே தொண்டென அமையும்
என் தமிழ் ஐயா மென்தமிழ் உலகில்
பொன்தமிழ்க் கதிராய் நிலமிசை வாழி!

விடுதலை உணர்வை வித்திட்ட தந்தையின்
அடியொற்றி நாட்டினை அடைந்திட விழைந்தே
கொடிகொண்ட கொம்பாக கொள்கைச்சீர் பாவல!
கொண்டனன் உம்மையே; நன்றுநீர் வாழிய!

தொண்டுக்கே வாழ்வென்ற தொண்டரே! தொடர்ந்திடும்
தொண்டர்க்குக் குறைவிலை; தோள்தரும் படையுண்டு.
தொடங்கிய வினைதனைத் தொடர்ந்திட, தலைவரே
தொடர்வினைக் கதிராகத் தூயோய் நீ வாழி!

— சீனு. அரிமா-பாண்டியன். புதுச்சேரி.

—தொடர்ச்சி 40- ஆம் பக்கம் பார்க்க.

தென்மொழி மின் அச்சகம், சென்னை-600 005(தமிழகம்).

www.thamizham.net - Free E book No 7519.